FEB. '50

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

REGISTRAR OF BOOKS
1950
MADRAS

"கண்ணன்"

தபால் பெட்டி : 604
மயிலாப்பூர்,
சென்னை, 4.

OFFICE OF THE ... REGISTRAR OF BOOKS
APR 1950
MADRAS

பொருளடக்கம்

மலர்: 1 இதழ்: 2

குழந்தைகளே! .. .. .. பக்கம் 2
தீராத விளையாட்டுப் பிள்ளை 3
ஜக்கு - பட்டணத்தில் - 'ஆர்வி' 4
அடிபட்ட நாய் - அம்புலு 11
சுவாமி வரம் கொடுத்தால் - படங்கள் .. 13
கத்திரிக்காய்க் கள்ளன் - 'சூடாமணி' .. 17
பவழவல்லி - கி. ரா. 20
பிச்சைமுத்து - பி. ஆர். ஆர். 25
ஜப்பான் - ச. கு. கணபதி ஐயர் 30
குழந்தை ரவி - கி. வா. ஜகந்நாதன் .. 35
சுஜாதா - 'சங்கரன்' 40
நீங்களே செய்யலாம் - படங்கள் 47
கண்ணன் கழக அங்கத்தினர்கள் 49
குப்பை போடாதே - எம். எஸ். ஸ்ரீநிவாஸன் 51
கீரியும் பாம்பும் - 'சோமசன்மா' 54
பூஜை - தி. ஜ. ர. 60

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

நரசிம்மன் என்ன செய்தான் தெரியுமா? போன மாதம் சொன்னேனே, அந்த நரசிம்மன் தான். 'கண்ணன்' வந்ததோ இல்லையோ, அதைத் தூக்கிக்கொண்டு மறைந்து போனான். பக்கம் பக்கமாக வரி வரியாக வாசித்துவிட்டான். இரண்டுமணி நேரத்துக்கு மேல் அவன் குறும்போ, சத்தமோ இல்லை. மைனுக் கதையைப் படிக்கிறபோது 'குக்ஷவீ குக்வீ' என்று அவனும் கத்தினது மாத்திரம் காதில் கேட்டது. ஜக்கு கதை, நேரு கதை எல்லாம் ஒன்று விடாமல் படித்துவிட்டான். அவன் அம்மாவுக்கு இப்போது ரொம்பச் சந்தோஷம். அவனுக்கு ஒரு நல்ல சிநேகிதன் கிடைத்துவிட்டான் என்ற சந்தோஷம்.

எல்லாம் படித்துவிட்டு வந்தான். "மாமா, மாமா, நான் கூடக் கதை எழுதப் போகிறேன். எழுதினுல் கண்ணனில் போடுவாயா?" என்று கேட்டான்.

"பேஷாக எழுது" என்று அவனுக்குச் சொல்லியிருக்கிறேன்.

உங்களிலே கூடப் பல பேருக்கு இதே யோசனை தோன்றியிருக்கும். "நாமும் கதை எழுதி அனுப்பலாமே!" என்று ஆவலாக இருக்கும். நரசிம்மனுக்குச் சொன்னதையே உங்களுக்கும் சொல்கிறேன்: "பேஷாக எழுதுங்கள்!" ஆனுல் ஒன்று மட்டும் ஞாபகப் படுத்துகிறேன். பழைய கதையைக் காபி அடித்து அனுப்பிவிடாதீர்கள். நீங்களே சொந்தமாக எழுதுங்கள்.

எழுதி அனுப்புங்கள். உங்களுக்கு நல்ல நல்ல பரிசெல்லாம் கிடைக்கும். குழந்தைகள் எழுதுவதற்கென்றே ஒரு பகுதி 'கண்ணனி'ல் ஒதுக்குவதாக இருக்கிறேன்.

உங்களுக்கு உற்சாகம் இருக்கவேண்டும். கதையும் நன்ருய் இருக்கவேண்டும். அப்படி இருந்தால் 'கண்ணன்' பத்திரிகை முழுவதிலுமே குழந்தைகள் எழுதிய கதைகளாக வரலாம். அப்போது எனக்கு எத்தனை சந்தோஷம் உண்டாகும், தெரியுமா?

சில குழந்தைகள் தங்கள் சின்னஞ்சிறு கைகளால் அழகான கடிதங்கள் எழுதியிருக்கிருர்கள். 'கண்ணன்'மேல் அவர்களுக்கு எத்தனை ஆசை! "ஏன், வாரத்துக்கு ஒருமுறை கண்ணனைக் கொண்டுவரக் கூடாது? 30-நாள் காத்திருக்க வேண்டியிருக்கிறதே!" என்று கே[illegible]கிருர்கள். அடுத்த 'கண்ணன்' மார்ச்சு மாதம் 15-ஆம் தேதி வெளிவருவான்.

—ஆசிரியர்

தீராத விளையாட்டுப் பிள்ளை

தின்னப் பழங்கொண்டு தருவான் - பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்பன் என்ஐயன் என்றல் - அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்.

—பாரதியார்

ஜக்கு

'ஆர்வி'

பட்டணத்தில்...

ஜக்கு மயிலாப்பூரிலுள்ள தன் மாமாவின் வீட்டில் மாடியறையில் படுத்துத் தூங்கிக்கொண் டிருந்தபோது டெலிபோன் மணி கிணுகிணு என்று ஒலித்தது. ஜக்கு எழுந்து உட்கார்ந்தான். அவன் இது வரையில் டெலிபோனில் பேசியதே இல்லை. பட்டணத்தில் பெரிய பெரிய ஆபீஸ்களிலும் பெரிய பங்களாக்களிலும் ஆஸ்பத்திரிகளிலும் வியாபார ஸ்தலங்களிலும் ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொள்ள இந்த டெலபோன் உபயோகப் படுகிறது என்பது அவனுக்குத் தெரியும். ஆனல் பேசினதுமட்டும் இல்லை. டெலிபோன் பணி விடாமல் கிணுகிணுக்கவே அவன் எழுந்திருந்து ரிஸீவரைக் கையில் எடுத்தான். எடுசததும், "யாரது?' என்று கணீரென்று கேட்டான்.

"ஹல்லோ! பேசுகிறது யார்; ஜக்குதானே?" என்று பதில் வந்தது.

ஜக்குவுக்குத் தன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டது ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது.

"ஆமாம், ஜக்குதான் பேசறேன். அங்கே பேசரது யார்?" என்று திருப்பிக் கேட்டான்

"ஊரிலிருந்து சொல்லிக் கொள்ளாமல் வந்ததற்காக உன்னிடம் உன் அப்பா பேசவேயில்லை. சரிதானே!"

ஜக்கு பதில் சொல்லாமல் திகைத்தான். பேசினது ஏதோ தெரிந்த குரல்போல இருந்தது. யாராக இருக்கும் என்று அவன் யோசித்தான்.

"ஹல்லோ ஜக்கு! உன்னுடைய அப்பா இன்றைக்கு ராத்திரி ஊருக்குப போகப் போகிறார். இல்லையா?"

"ஆமாம்" என்றான் ஜக்கு சுருக்கமாய்.

"நீ ஒரு வாரம் கழித்துத்தான் தனியாகப போகப போகிறாய். அதுவும் உண்மைதானே?"

"ஆமாம்."

"உன்னிடம் பேசாவிட்டாலும் உன் செலவுக்காக உன் அப்பா உனக்குப் பணம் கொடுத்தாரே, எவ்வளவு?"

ஜக்கு சட்டென்று, "பத்து ரூபாய்" என்றான் இதைக் கேட்டதும் அந்தப் பக்கத்தில் பேசிய குரல் கடகடவென்று சிரித்தது.

"அடேய் ஜக்கு! பொய்யா சொல்கிறாய்? நான் சொல்லட்டுமா எவ்வளவு என்று. 25-8-3! சரியாக இருக்கிறதா?"

ஜக்குவுக்குப் பேச்சே நின்று விடும்போலிருந்தது. அப்பா முதலில் இருபத்தைந்துதான் கொடுத்தார். எல்லாம் ரூபாய் நோட்டுக்கள். அதனல் எதற்கும் அவனிடம் சில்லறை இருக்கட்டும் என்று கையிலிருந்த எட்டேகால் அணவையும் கொடுத்துவிட்டார். இதெல்லாம் இந்தக் குரலுக்கு எப்படித் தெரிந்தது? ஜக்கு ரிஸீவரைக் கீழே வைத்துவிடலாமா என்று நினைத்தான். அவனுடைய தைரியமெல்லாம் பறந்துவிட்டது. என்னதான் நடக்கிறது பார்க்கலாமே என்ற அசட்டுத் துணிச்சலுடன், “நீங்கள் சொன்னது சரியாய் இருக்கு. நான் முதல்லே எண்ணிப் பார்க்கலே” என்ருன். மறுபடியும் கடகடவென்று சிரிப்பு.



“டேய் ஜக்கு, ஜாக்கிரதை! இது பட்டணம். ஏதாவது இங்கே வந்து உன் தஞ்சாவூர் வாலைக் காட்டினயோ, பார்த்துக்கொள். மரியாதையாக அவசியமான இடங்களைப் பார்த்துவிட்டு நல்ல பையனக ஊருக்குப் போய்ச் சேரவேண்டும்” என்றது குரல்.

“சரி - ரொம்ப சரி; நீங்க யாரு தெரியலியே?” என்ருன் ஜக்கு. அடுத்த நிமிஷம் டெலிபோன் சத்தம் டப்பென்று நின்றுவிட்டது. பதில் இல்லை. ஜக்கு ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு வாசலை ஒட்டிய ஜன்னல் பக்கம் வந்து நின்ருன். எதிர் பங்களா வாசலில் நின்று இந்த ஜன்னலையே பார்த்துக்கொண்டிருந்தான் ஒரு பையன். காலைமுதல் அவன் இப்படி அடிக்கடி தன்னையே பார்ப்பதைக் கவனித்து வந்தான் ஜக்கு. அந்தப் பையன் ஜக்குவைக் கீழே வரும்படி கை ஜாடை காட்டி அழைத்தான்.

ஜக்குவுக்கு இது வித்தியாசமாகப் படவில்லை. ஏனென்ருல் அந்தப் பையனுக்கும் அவன் வயசுதான் இருக்கும். அவன் சின்னதாக ஒரு சைகிள் வைத்திருந்தான். அவன் வீட்டு வாசலில் ஓர் ஊஞ்சல் பலகை தொங்கிக்கொண்டிருந்தது. பந்து விளையாட விசாலமாய் இடம் இருந்தது. இப்படி ஒரு பையனுடைய சிநேகம் இருந்தால் எவ்வளவு நல்லது என்று அவன் எண்ணியிருந்தான். இப்பொழுது அவனக வலுவில்கூப்பிட்டதும் ஆனந்தப்பட்டுக் கீழே இறங்கி ஓடினன்.

அவன் வாசலில் இறங்குவதும் அவனுடைய மாமா மோட்டார் சைகிளில் வந்து சேர்ந்ததும் ஒன்ருய் இருந்தன.

“எங்கேடா ஓடுகிருய்?” என்று கேட்டார் மாமா. ஜக்கு பதில் சொல்லவில்லை. அதற்குள் அந்தப் பையன் வந்து, “நான் தான் ஸார், அவனைக் கூப்பிட்டேன்” என்ருன்.

ஜக்குவின் மாமா சிரித்துக் கொண்டே, “அடே நல்ல ஜோடிதாண்டா நீங்கள்! ஜக்கு! இவன் நந்து! பேஷ், பேஷ், பெயர்கூட இரண்டு பேருக்கும் மூன்று எழுத்துக்கள் தாண்டா! ஜக்கு! இனிமே உன் பாடு வேட்டைதான். நீ பார்க்க வேண்டிய இடமெல்லாம் வந்து சுத்திக்காட்ட நந்து இருக்கான். அடி சக்கை!” என்ருர்.



ஜக்குவும் நந்துவும் ஒருவரைப் பார்த்து ஒருவர் சிரித்துக்கொண்டார்கள். இதையெல்லாம் பின்புற வராந்தாவில் நின்ற ஜக்குவின் அப்பாவும் பார்த்துக்கொண்டிருந்தார்.

வெகு சீக்கிரமே நந்துவும் ஜக்குவும் தோள் மேல் கைபோட்டுக்கொண்டு ஊஞ்சலாட ஆரம்பித்தனர். இரவு அப்பா ஊருக்குக் கிளம்புகிற சமயத்தில் ஜக்கு வந்துவிட்டான். சாப்பிட்டுவிட்டு அவர் போனதும் ஜக்குவும் படுத்துக் கொண்டான். டெலிபோன் பேச்சு, அந்தக் கடகட சிரிப்பு, அப்புறம் நந்துவுடன் ஒரு நிமிஷத்தில் சிநேகமானது, ஊஞ்சல் ஆட்டம் இவற்றையெல்லாம் மாறிமாறி எண்ணிக்கொண்டே அவன் தூங்கிப் போனான்.

மறுநாள் காலையில் ஜக்கு காபி சாப்பிட்டுவிட்டு வெளியில் வந்ததும் நந்து எங்கோ புறப்படத் தயாராய் டிரஸ் பண்ணிக்கொண்டு நின்றதைப் பார்த்தான்.

"என்னடா ஜக்கு! இன்னிக்குக் குடியரசு நாள், தெரியாதா உனக்கு? வருவதானால் என்னோடு நீயும் டிரஸ் பண்ணிக்கொண்டு கிளம்பு. ஒரு சுத்துச் சுத்திவிட்டு வரலாம்" என்றான்.

ஒரே நொடிதான். மாமியிடம் நந்துவோடு போவதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டு வந்துவிட்டான் ஜக்கு.

"முதல்லே எங்கே போகலாம்?" என்று கேட்டான் நந்து.

"முதல்லே டவுனுக்குப் போய் அப்படியே ஹார்பருக்குப் போவோமடா!" என்றான் ஜக்கு. முதல் காரியமாய் இதுவரை பார்க்காத ஹார்பரையும், அங்கு வரும் கப்ப[illegible]யும் பார்க்க வேண்டும் என்[illegible] தான் அவன் ஆசை.

"சரி; ஆனால் அங்கே நம்மையெல்லாம் உள்ளே விடமாட்டானடா!" என்றான் நந்து.

"ஓ ஹோ! அதையுந்தான் ஒரு கை பாத்துடலாமே! எப்படியாவது உள்ளே போறதா ஒரு பிரமாதம்?" என்றான் ஜக்கு, கன அலக்ஷ்யமாய். சொல்லும் போது அலக்ஷ்யமாய்ச் சொல்லி விட்டானே தவிரச் சொன்னவுடன் திடீரென்று, 'தஞ்சாவூர் வாலைக் காட்டினாயோ, பார்த்துக்கொள்' என்று யாரோ டெலிபோனில் கூறிய விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. அந்த அச்சத்தை நந்துவிடம் காட்டிக்கொள்ளாமல், "சரி; புறப்படுவோமா?" என்று சொல்லிக் கிளம்பினான்.

பஸ்ஸில் ஏறி ஹார்பருக்கு வந்து சேர்ந்தார்கள். ஊரில் பையன்களிடம் வெறும் சவடால் அடித்துவிட்டு வந்திருந்தான். ஆனால் இன்றைக்கு உண்மையாகவே அவன் ஹார்பருக்கு வந்துவிட்டான். இதை

நினைக்கும்போது அவனுக்கு ரொம்பப் பெருமையாய் இருந்தது.

ஆனால் நந்துவையும் அவனையும் அங்கே நின்ற காவற்காரன் உள்ளே விட மறுத்துவிட்டான்.

ஜக்குவின் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது. பார்க்காமல் திரும்புவதா என்ற எண்ணத்தினால் மூளை பரபரவென்று வேலை செய்தது.

டக்கென்று மணிபர்ஸைத் திறந்தான். பிறகு டைரியை எடுத்தான். இதையெல்லாம் அந்தக் காவற்காரன் பார்த்துக் கொண்டுதான் இருந்தான்.

"எம்பா, டெலிபோன் எங்கே இருக்கு?" என்றுஜக்கு அவனைப் பார்த்துக் கேட்டான்.

காவற்காரனுக்கு யோசனையாகிவிட்டது. பையன்கள் யாரோ உத்தியோகஸ்தர் வீட்டுப் பிள்ளைகள் போலிருந்தார்கள். டெலிபோனில் உள்ளே இருக்கிறவர்களைக் கூப்பிட்டு ஏதாவது சொன்னால் என்ன செய்வது என்று நினைத்து, "தம்பிகளா! உள்ளே யாரைப் பார்க்கப் போறீங்க?" என்று கேட்டான்.

"அதெல்லாம் உனக்கென்ன? நீதான் உள்ளே விடமாட்டேன் என்கிறாயே!" என்றான் ஜக்கு ஜம்பமாய்.

"நான் எப்போ சொன்னேன்?" என்றான் காவற்காரன்.

"அப்போ உள்ளே விடு. நாங்கள் போய் எங்கப்பாவைப் பார்த்துவிட்டு உடனே வந்துவிடுகிறோம்" என்றான் ஜக்கு. நந்து ஒன்றும் பேசாமல் நின்றுகொண்டிருந்தான்.

காவற்காரன் பார்த்தான். 'சரி, சிறுபிள்ளைகள்! அப்புறம் ஒன்று கிடக்க ஒன்று வந்துவிடப்போகிறது' என்று ஜக்குவைப் பார்த்து, "ஜல்தியாய்த் திரும்பிடணும், தெரியுமா?" என்றான்.

ஜக்கு, "ஓ! ஜல்தியாய் திரும்பிடுவோம்" என்றான்.

அடுத்த நிமிஷம் கப்பல் நிற்குமிடத்துக்கு வந்து நின்றார்கள். அப்பொழுது 'ஜல் - ஜல்' என்ற பிரயாணிக் கப்பல் கரையோரத்தில் நின்றுகொண்டிருந்தது ஒரே மூவர்ணக்கொடிகளாலும், தோரணங்களாலும் கப்பலை அலங்கரித்திருந்தார்கள். அடேயப்பா, எவ்வளவு பெரிய கப்பல்! எவ்வளவு உயரம்!

ஜக்குவும் நந்துவும் பிரமித்துப் போய் நின்றார்கள். இந்தக் கப்பலை யார் கட்டினார்களோ! எங்கேயிருந்து இது வந்ததோ! எங்கே போகப்போகிறதோ! - ஜக்குவுக்கு இந்த மாதிரி நினைவுகள் எழுந்தன. கொஞ்ச தூரமாவது இந்தக் கப்பலில் பிரயாணம் செய்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்!

அடுத்த கணம் கப்பலின் தட்டுக்கு ஏறும் படிகளில் கால் வைத்து நின்றான் ஜக்கு.

"டேய், யார் அது?" என்று ஒரு குரல் அவனைப் பார்த்து அதட்டியது.

ஜக்கு திரும்பிப் பார்த்தான். "இறங்கு கீழே!" என்றான் அங்கு வந்த ஆள்.

"ஏன்?" என்றான் ஜக்கு, பயப்படாமல்.



அதற்குள் பளபளவென்று பொத்தான்களும், சமுத்திர நீலத்தைத் தோற்கடிக்கும் நீலக்கோட்டும், அழகான தொப்பியும் அணிந்த ஓர் உத்தியோகஸ்தர் அவன் எதிரே வந்து நின்றார். இவர்தான் கப்பல் காப்டன் போலிருக்கிறது என்று எண்ணிக்கொண்டு தைரியமாய், "காப்டன், பாருங்கோ காப்டன், ஏறப்படாது என்கிறான் இவன்" என்றான். நந்து கீழே போய்விட்டான்.

அவர்தான் காப்டனோ என்னவோ! ஜக்கு அப்படித்தான் அவரைக் கூப்பிட்டான். அவர் அவனை மேலும் கீழும் பார்த்து, "ஹூ யூ" என்றார், இங்கிலீஷில்.

"ஜக்கு! ஜகந்நாத்" என்றான் ஜக்கு.

"எங்கே வந்தே?" என்றார் காப்டன். இங்கிலீஷில்தான் பேசினார். ஜக்குவுக்கு இந்த இங்கிலீஷ் எல்லாம் புரியாதா, என்ன? "கப்பல் டெகொரேஷனைப் பார்க்க!" என்றான்.

"ஓ! யார் உங்க அப்பா?"

"கிருஷ்ணமூர்த்தி?

"விச் கிருஷ்ணமூர்த்தி? போர்ட் போர்மென், கிருஷ்ணமூர்த்தி?"

"எஸ், எஸ்!"

காப்டன் அவன் முதுகைத் தட்டினார். "ஓடு, பாத்துட்டு உடனே திரும்பிடு. இன்னிக்குப் பத்திரிகை நிருபர்கள் வருகிறாங்கோ! அதற்குள்ளே திரும்பிடணும்" என்றார் அவர் தமிழில்.

"அடே நந்து, வாடா!" என்று கூப்பிட்டான் ஜக்கு. நந்து அங்கே இருந்தால்தானே? பயந்து போய் ஒரு மூலையி நின்றுகொண்டிருந்தால ஜக்கு கைகாட்டிக் கூப்பிட்டும், "நான் வரல்லே, நீ பாத்துட்டு வா! நான் இங்கேயே நிற்கிறேன்" என்றான்.

ஜக்கு போனான் போனான், போனதுதான். மணி பன்னிரண்டு ஆகிவிட்டது. நந்துவுக்குப் பசி வயிற்றைக் கிள்ளிற்று. எவ்வளவு நேரம் அவன் தனியாக மொட்டு மொட்டு என்று நிற்பான். கப்பலைப் பார்த்தபடியே நின்று விழித்துக் கொண்டிருந்தான். திடீரென்று கப்பல் நடுவில் ஒரு வெளிச்சம் தெரிந்தது. ஒரு ஜன்னல் திறந்திருந்தது. அதன் வழியாக ஜக்கு எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். கையில் ஒரு ரொட்டியை வைத்துத் தின்று கொண்டே, "டேய் நந்து! அங்கேயே நிற்கிறயே, வாடா!" என்று கூப்பிட்டான்.

அந்தச் சமயத்தில் வாசல்புறமிருந்து ஒரு கூட்டம் வந்தது. வெள்ளை வெளேரென்று கதராடை உடுத்துக்கொண்டு சிலரும், தடபுடலாகக் கப்பல் யூனிபாரம் அணிந்த சிலரும், போலீஸ்காரர்கள் சிலருமாக வந்துகொண்டிருந்தனர். நந்து ஒரு மூலையில் உடனே பதுங்கிக் கொண்டான். ஜக்கு மட்டும் பயப்படாமல் ஹி, ஹி என்று சிரித்த வண்ணம் அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அப்போது கூட்டத்திலிருந்து காமிரா வைத்துக் கொண்டிருந்த ஒருவர் முன்னால் வந்தார். கப்பலின் மேல்தளத்தில் மாலுமிகள் அணிவகுத்து

...தை அவர் போட்டோ ...க்கலானார். ஜக்கு அந்த ...த்தை விட்டு அசையவில்லை. 'கிளிக்!'

போட்டோ எடுத்தாயிற்று. கொடியேற்ற விழா முடிந்தது. ஜக்குவும் சிரித்தபடியே போட்டோவில் விழுந்துவிட்டான். அது அவனுக்கே தெரியாது.

சற்றுப் பொறுத்து ஜக்குவின் தோள்மேல் யாரோ கை வைத்தார்கள். அவன் திடுக்கிட்டான். பார்த்தால் முதலில் அதட்டிய காவற்காரன்.

"இங்கே என்ன செய்யிறே? உம்!" என்று அவன் மறுபடியும் அதட்டினான்.

வாய் முழுவதும் ரொட்டி. ஜக்குவால் பேச முடியவில்லை. அவன் ஜக்குவின் கையைப் பிடித்துப் படிகள்வரை அழைத்துக் கொண்டு வந்துவிட்டான். ஜக்கு திமிறிக்கொண்டே வந்தான்.

"போ! இனிமே இப்படியெல்லாம் வந்து கப்பலுக்குள் உன் இஷ்டப்படி சுத்தினயோ போலீஸ்காரன்கிட்டே உன்னை விட்டுடுவேன், போ!" என்றான் காவற்காரன். அதற்குள் காப்டன் அங்கே வரவே காவற்காரன் போய்விட்டான். அவன் காதில் விழும்படி ஜக்கு, "நான் எல்லாவற்றையும் பாத்துப்புட்டேன். இனிமே போகத்தான் போறேன். அதற்குள்ளே ரொம்ப விரட்டறயே!" என்றான். காப்டனே சிரித்துக் கொண்டு போய்விட்டார்.

நந்து இவ்வளவையும் பார்த்துவிட்டு, "அடே ஜக்கு! இனிமே போகலாண்டா வாடா" என்று கூப்பிட்டான்.

அடுத்த நிமிஷம் அவர்கள் ஆனந்தமாய்க் கைகோத்துக் கொண்டு வெளியில் வந்தார்கள். "பாத்தயாடா ஜக்குவின் வேலையை! உள்ளே விடமாட்டானாம்! நம்மைக் கண்டு இந்த வாசல் காவல்காரன் அதோ சல்யூட் அடிக்கிறான், பாத்தயா? எல்லாத்துக்கும் சாமர்த்தியம் வேணும்" என்றான்.

உண்மையாகவே அவர்கள் வெளியில் வரும் போது வாசல் காவற்காரன் யாருக்கோ ஒரு சல்யூட் அடித்துக் கொண்டுதான் இருந்தான்.

வீட்டுக்குப் போய்ச் சட்டையைக் கழற்றிவைத்துச் சாப்பிட்டுவிட்டு ஜக்கு மாடியில் படுத்துக் களைப்பாறினான். சாயங்காலம் ஆயிற்று. அப்போது டெலிபோன் மணி பயங்கரமாய்க் கிணுகிணுத்தது:

"டேய், ஜக்கு! ஹார்பர் போயிருந்தயா?"

ஜக்கு பயத்துடன், "ஆமாம்!" என்றான்.

"நாளைக்கு லைட்ஹவுஸ் போகப் போகிறாய்; இல்லையா?"

"ஆமாம்" என்றான் ஜக்கு தன்னை அறியாமல்.

"ஜாக்கிரதை!" என்றது அந்தக் குரல்.

ஜக்கு வெடவெடவென்று கைகள் நடுங்க டெலிபோன் ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டான்.



அடிபட்ட நாய்

அம்புலு

ஒரு நாய் வீதி வழியே போய்க்கொண் டிருந்தது.

அதற்கு அதிகப் பசியாக இருந்தது. யார் வீட்டிலே யாவது எச்சில் இலை போட மாட்டார்களா என்று பார்த்துக்கொண்டே போயிற்று. ஒரு வீட்டிலும் ஒன்றும் போடவில்லை. யார் வீடாவது கொல்லைப் பக்கம் திறந்திருந்தால் நுழைந்து பார்க்கலாம் என்று நினைத்தது. நல்ல வேளையாக ஒரு வீட்டின் பின் கதவு திறந்திருந்தது. மெதுவாக நாய் எட்டிப் பார்த்[illegible]து. ஒருவரும் அங்கே அப்போது இல்லை. துணி[illegible]து உள்ளே நுழைந்தது. ஒரு சோற்றுப் பானை அதன் கண்ணில் விழுந்தது. உடனே ஆவ[illegible]டு அதில் உள்ள சோற்றைத் தின்னத் தொ[illegible]கியது. அப்போது திடீரென்று வீட்டுக் கார[illegible] பையன் அங்கே வந்தான். நாயைப் பார்த் தா[illegible] தன் கையில் இருந்த கழியை வேகமாக நா[illegible] மேல் எறிந்தான்.

[illegible] நாயின் முகத்தில் வந்து தாக்கியது. பா[illegible] நாய் வாள், வாள் என்று குரைத்தபடியே

ஓடி வந்துவிட்டது. முகத்தில் நல்ல காயம். ரத்தம் சிந்தியது. செத்தேன், பிழைத்தேன் என்று தன் மனைவியிடம் வந்து நின்றது. அது புருஷனைக் கண்டு திடுக்கிட்டது. இரண்டும் பேசிக்கொள்கின்றன.

பெண் நாய்:

சுருட்டிவரும் வாலழகும்
சுந்தரமாம் கண்ணழகும்
பச்சரிசிப் பல்லழகும்
பாடிவரும் குரலழகும்
அமைந்திருக்கும் கொற்றவரே
ஆர்அடிச்சார் ஆண்டவரே?

ஆண் நாய்:

அடி - மெள்ளச் சொல்லடி
பின்னே சொல்லடி
காய்ச்சி ஒத்தடி கன்னத்திலே.

பெண் நாய்:

எச்சில் இலை போட்டக்கால்
எட்டி எட்டிப் பார்ப்பீரே
கல்எடுத்துப் போட்டக்கால்
காதவழி போவீரே.
கொற்றவ ரேஉம்மை ஆரடிச்சார்?
குடமல்லிப் பூவே உம்மை ஆரடிச்சார்?

ஆண் நாய்:

அடி - மெள்ளச் சொல்லடி
பின்னே சொல்லடி
காய்ச்சி ஒத்தடி கன்னத்திலே.

பெண் நாய்:

படல்இட்ட வாசலுக்குப்
பத்துத்தரம் போவீரே
கதவிட்ட வாசலைக்
கண்ணெடுத்துப் பாரீரே
கூழ்ப்பானை திருடிவரும்
கொற்றவ ரேஉம்மை ஆரடிச்சார்?
மாப்பானை திருடிவரும்
மன்னவ ரேஉம்மை ஆரடிச்சார்?

ஆண் நாய்:

அடி - மெள்ளச் சொல்லடி
பின்னே சொல்லடி
காய்ச்சி ஒத்தடி கன்னத்திலே.

சுவாமி வரம் கொடுத்தால்

"சுவாமி உங்களுக்கு ஒரு வரம் கொடுக்கிறார். நீங்கள் என்ன வரம் வேண்டும் என்று கேட்பீர்கள்? அதை அப்படியே எழுதுங்கள்" என்று கேட்டோம். இதோ எட்டுக் குழந்தைகள் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதியபடி இங்கே பிரசுரித்திருக்கிறோம்.

ஆர். காளிதாஸ், வயது 9.



எம். சங்கரன், வயது 13.

நான் நல்ல ம்ருதங்க வித்வானாகவேண்டும். ஏனெனில் நான் ம்ருதங்க வித்வானானால் என் பெயர் உலகம் முழுவதும் என் பெயர் பரவும். அதனால் பிறகு எனக்கு ஸங்கீத கலாநிதி ஆஸ்தான வித்வான் என்ற பெயர்கள் கிடைக்கும். எனக்கு பிறகு பல சிஷ்யர்கள் ஏற்படுவார்கள். பிறகு என்னை பெரிய மனுஷர்களெல்லாம் வந்து என்னை ம்ருதங்கம் வாசிக்க கூப்பிடுவார்கள். இதற்க்காகவே நான் இவ் வரத்தைக் கேட்டேன்.

எனக்கு படிப்பு வரம் வேண்டும். என் மூன் கடவுள் வந்தால் எனக்கு படிப்பு நன்றாக வரம் வேண்டும். படிப்பு அதிகமாய் படித்தால் நமக்கு வேலை கிடைக்கு சம்பாதிக்கலாம் எனக்கு ஒருவனை வெல்ல சக்தி வேண்டும். என் என்றால் நாம் ஒரு சயம் அரசனாய் போனோம் அப்போது ஒரு அரசன் நம்மலை வொல் வந்தால் நாம் என்ன செய்வோம். அதனால் நம் ஒருவனை வெல்ல சக்தி வேண்டும்



பி. எஸ். ஸ்ரீநிவாஸன், வயது 11.

ஜி. பட்டாபிராமன், வயது 12.

நான் நன்றாக படிக்க வேண்டும், நான் நல்ல புத்தியை அடைய வேண்டும், ஸ்கூலில் முதல்வனாக இருக்க வேண்டும், உபாத்தியாயர்கள் நல்லவன் என்று சொல்ல வேண்டும். என்னை வெளியில் பார்பவர்கள் இவன் தந்தை என்ன அருந்தவம் செய்து பெற்றாரோ என்று தாய் தந்தையை புகழவேண்டும், நான் இந்த மாதிரி வரம் கேழ்க்கக் காரணம், பின்வருமாறு, என்னை பார்ப்பவர்கள் இவன் நல்ல பிள்ளை, ஒருவருடனும் கெட்ட வார்த்தைகளோ அல்லது சண்டைச் சச்சரவுகளோ போடாமல் நல்ல பிள்ளையாக இருக்கிறான் என்று சொல்ல வேண்டு, ஆதலால் இவ்வரம் கேழ்கிறேன்.

நான் நன்றாக படித்து உலக மஹான்களைப்போல் பெயர் பெற வேண்டும் ஏனென்றால் படிக்காவிட்டால் உலகத்தில் வாழ முடியாது படித்தால்தான் எல்லோரும் நம்மை மதிப்பார்கள் மஹான் ஆக ஏன் வேண்டுமென்றால் ஒரு மனிதன் உலகத்தில் பிறந்து அவன் புகழப்படாவிட்டால் மிருகத்திற்கு சமம் ஆவன் என்று திருக்குறள் கூறி இருக்கிறது அது என்னவென்றால் தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று

வாசுதேவன், வயது 12.

கே. ஐயராமன், வயது 12.

நான் என்னுடைய மனைவியுடனும், பிள்ளைகளுடனும் சுகமாக வாழவேண்டும். நன்ருக படிக்கவேண்டும். நன்ருக வேலை செய்யவேண்டும். நன்ருகக் கணக்கு போடவேண்டும். ஏன் என்ருல் ஆபீஸில் பெரிய வேலையாக பார்த்துக் கொடுப்பார்கள். பணம் அதிக வரும். இவைகளை கண்டால் பலர்கள் பார்த்து மகிழ்ச்சி அடைவார்கள். பணக்காரனுக ஆகணும். ஏழைகளுக்கு தர்மம் செய்யவேண்டும். சில வியாதிகள் வரக்கூடாது. அப்படி வந்தால் அதற்கு மருந்துகள் என்னிடத்தில் இருக்கவேண்டும். நான் கார், சைகில், சில விளையாட்டு சாமான்கள் வாங்க வேண்டும். நான் என் பிள்ளையை நன்ருக படிக்க வைக்கவேண்டும். என்னை உபாத்தியாயர் அடிக்காமல் இருக்கவேண்டும்.

எனக்கு நிறைய படிப்பு வேண்டும். நான் நிறையப் படித்திருந்தால் என்னை பெரிய உத்தியோகத்தில் சேர்த்துக் கொள்வார்கள் அரசாங்கத்தார். அப்பொழுது எனக்கு நிறைய சம்பளம் வரும் நான் சௌக்கியமாய்க் காலங் கழிப்பேன். என்னிடம் படிப்பு இருப்பதால் என்னை எல்லோரும் வித்வான் என்று புகழ்வார்கள். நான் பிரசங்க மேடையில் ஏறி நின்று பிரசங்கங்கள் எல்லாம் செய்வேன். எனக்கு நிறைய வாழ்த்துக்கள் கூறி எனக்கு எல்லோரு மாலை போட்டு மகிழ்வார்கள் அதனுல்தான்.



சந்திரசேகரன், வயது 12.

பி. ஜயராமன், வயது 12.

நான் கடவுளை கேட்பதாவது:- நம் இந்திய தேசத்தில் சண்டைச் சச்சரவுகளும் போட்டியிட்டு பாழாகாமல் ஒற்றுமை வலு வடைய வேண்டும் இந்திய நாட்டில் அமைதி நிலவவேண்டு குடிகள் சுகமாக வாழவேண்டும். இந்தியாவில் கடவுள் பக்தி நிலவ வேண்டும் இந்தியாவில் அஹிம்சை, பிறருக்கு நன்மை செய்தல் முதலியன நம் இந்திய நாட்டில் பரவவேண்டும் ஏன் இந்த வரத்தை கேட்கிறேன் என்று கேட்டால். நமக்கு குடியரசு வந்துவிட்டது இனிமேல் எல்லோரும் இந்நாட்டு மன்னர் தபால்காரன், அம்பட்டன், பறையன் முதலியோரும் இந்நாட்டு மன்னர், மன்னர் என்ருல் ஒவ்வொருவரும் நான் இட்டதுதான் சட்டம் என்று சண்டை கொள்ளக்கூடாது அரசர் என்ருல் நாட்டை பாதுகாக்க வேண்டும் இதில் எனக்கு என்ன நன்மை என்ருல் எல்லோரும் சுகமாக இருந்தால் என் சுகத்திற்கு என்ன குறைச்சல் அதனுல்தான் நான் இதை கேட்கிறேன். இதை கடவுளாகிய நீங்கள் கொடுப்பீர்களென்று நம்புகிறேன்

சுவாமி. எனக்கு நன்ருக படிக்கவேணும், ஏன்னென்ருல் எனக்கு படிப்பு சரியாக வரவில்லை, டிக்டேஷன் போட்டால் தப்பு வாங்கிடுகிறேன் பரிட்ஷையில் மார்க்குகள் குறைவாய் வாங்குகிறேன் படிப்பு நன்ருக வரவேணும் ஒரு வரம் சுவாமியை கேட்கிறேன்.

கத்திரிக்காய்க் கள்ளன்

'சூடாமணி'

கதையும் சொல்லப் போகிறேனே
கட்டழ குடைய பொம்மைகளே !
கதையை எல்லாம் கேட்டவுடன்
கண் அயர்ந்து தூங்கவேணும்.
காக்காய் வந்து கத்திரிக்காய்த்
தோட்டம் ஒன்று போட்டதாம்.
காத்து இருந்த கள்ளநரி
காயைத் திருடிப் போச்சுதாம்.
கத்தி ரிக்காய்க் கள்ளனைத்தான்
கட்ட வலையும் போட்டதாம்.
கத்திரிக்காய்த் தோட்டத்திலே
கண்மறைவாய் இருந்ததாம்.

கள்ள நரியும் மெள்ள வந்து
கண்ணைச் சிமிட்டிப் பார்த்ததாம்.
'காக்காய் இல்லை' என்றுசொல்லிக்
காயைத் திருடக் குதித்ததாம்.

கட்டி வைத்த வலைக்குள்ளே
கள்ள நரியும் விழுந்ததாம்.
எட்டி நின்ற காக்காயும்
கிட்ட வந்து பார்த்ததாம்.

கட்டி வைத்த வலைக்குள்ளே
கள்ள நரியைக் கண்டதாம்.
கட்டை ஒன்றை எடுத்துவந்து
கள்ள நரியை அடித்ததாம்.

குள்ள நரியோ ஊளையிட்டுக்
கண்கலங்கித் துடித்ததாம்.
கள்ளக் கையைக் குவித்து நின்று
'காக்க வேணும்' என்றதாம்.

கள்ள நரியைக் கட்டவிழ்த்துக்
காட்டுப் பக்கம் ஓட்டியே
கத்தி ரிக்காய்த் தோட்டத்தைக்
காக்காய் நாளும் காத்ததாம்.

கதையைக் கேட்ட பொம்மைகளும்
கண்ணை மூடிச் சாய்ந்ததாம்.
கதையும் நன்ருய் முடிந்ததாம்
கத்திரிக்காய் காய்த்ததாம்.

பவழவல்லி

கி. ரா.

2

அற்புத உலகம்

சுந்தரத்துக்குச் சுய நினைவு வந்தபோது, தான் இருக்கும் இடமே தெரியவில்லை. மெதுவாகக் கண்ணை விழிக்க முயன்றான். 'கிரீச், கிரீச்' என்று பட்சிகள் கூவும் சத்தம் காதில் விழுந்துகொண்டேயிருந்தது. தலையைத் தூக்கித் தன்னைச் சுற்றிலும் பார்த்தான். ஒரே பசுமையான வெளிச்சம் எங்கும் வீசியது. அவனுடைய தலைக்குப் பக்கத்தில் உயரமான அல்லித் தண்டைப்போல் ஒரு மரம் தெரிந்தது.

அவன் எழுந்து உட்கார்ந்தான். அதைப்போலவே இன்னும் பல அல்லிமரங்கள் நின்றுகொண்டிருந்தன. அந்த மரங்களின் உச்சியில் குடை விரித்ததைப்போல் பல மஞ்சள் புஷ்பங்கள் பூத்திருந்தன. அந்தப் புஷ்பங்களின் மேல் சின்னச் சின்னக் குருவிகள், பலவர்ணக் குருவிகள் உட்கார்ந்து கூவிக் கொண்டிருந்தன. சுந்தரம் ஒன்றும் புரியாமல் திரும்பிப் பார்த்தான்.

சற்றுத் தூரத்தில் இன்னொர் அல்லிமரத்தடியில் ஏதோ ஒரு வஸ்து பளபளவென்று மின்னிற்று. அது கொஞ்சம்கொஞ்சமாக நகர்ந்து வந்தது. தங்கத்தினால் செய்யப்பட்ட தட்டு அசைந்து வருவதைப்போல் தோன்றியது. சமீபத்தில் வந்ததுந்தான் அது ஓர் ஆமை என்பது தெரிந்தது. அதன் மேல் ஓடு நிஜத் தங்கமயமாக இருந்தது! அது கழுத்தை வெளியே நீட்டும்போது அதன் கண்களைப் பார்த்தான். அவை இரு சிறு பவழங்கள்!

அவனுக்கு ஒரே ஆச்சரியமாய் இருந்தது. அது என்ன உலகம்? அவன் எப்படி அங்கே வந்தான்?

அவன் என்ன செய்வது என்று புரியாமல் நாலு பக்கமும் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். அவனுடைய வியப்பும் பிரமிப்பும் அதிகரித்தனவே ஒழிய, குறையவில்லை. மற்றொரு பக்கத்தில் கீழே சில நண்டுகள் ஊர்ந்துகொண்டிருந்தன. அவைகள் ஒரே வெள்ளிமயமாய் மின்னின!

சுந்தரத்துக்கு ஒரே பயமாய் இருந்தது. இந்த உலகத்துக்கு



ஏன் வந்தோம் என்று நினைத்தான். ஆனால் அவனாக அங்கு வரவில்லையே? எப்படியோ அங்கே வந்துவிட்டான். அதை விட்டு எப்படியாவது வெளியில் தப்பிப்போக வழி உண்டா என்று பார்த்தான். ஒரு வழியும் தெரியவில்லை.

இன்னும் சிறிது தூரம் நடந்து போய்ப் பார்க்கலாம் என்று ஆமை கிடந்த திக்குக்கு எதிர்ப்புறமாகப் போனான்.

போகப் போக இன்னும் விசித்திரமாக இருந்தது. அவன் தலைக்குமேல் ஏதோ பறந்து போய்க்கொண்டிருப்பது தெரிந்தது. சட்டென்று நிமிர்ந்து பார்த்தான். என்ன ஆச்சரியம்! நீல நிறமான புஷ்பம் ஒன்று குடையைப் போல் விரிந்து காற்றில் பறந்து கொண்டிருந்தது. அதன் மேல் ஒரு கருவண்டு உட்கார்ந்திருந்தது. அதைப் போல் இன்னும் அநேகம் வர்ணங்களுடைய புஷ்பங்கள் பறந்த வண்ணம் இருந்தன. ஒவ்வொன்றின் மேலும் ஒரு வண்டு சவாரி செய்தது.

சுந்தரம் அவற்றைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கும்போதே ஒரு புஷ்பம் அவன் முகத்துக்கு நேராகப் பறந்து சென்றது. ஆஹா! என்ன வாசனை! அப்படியே மயங்கிப் போய் நின்றான்.

அப்போது அவன் காலடியில் பூமி அசைவதைப்போல் தோன்றியது. அவன் என்னவென்று குனிந்து பார்ப்பதற்குள் ஒரு தாமரை இலை அகலத்துக்குப் பூமி வெடித்து அவனையும் சேர்த்துக் கீழே இழுத்துக்கொண்டு போயிற்று. அவன் பயந்துபோய், காலைத் தூக்கி மேலே வைத்து ஓட வேண்டுமென்று நினைத்தான். அதற்குச் சாவகாசமே இல்லை. கிணற்றுக்குள் வாளியில் உட்கார்ந்து கொண்டு வேகமாக இறங்கினால் எப்படி இருக்கும்? அப்படி இருந்தது அவனுக்கு.

'டக்'கென்று அவனுடைய கால்கள் கீழே இடித்தன. அவன் சமாளித்து நிற்பதற்குள் ஒரு பக்கமாகச் சாய்ந்து படீரென்று ஒரு வாழை மரத்தின் மேல் மோதிக்கொண்டான். வாழை மரமா அது? அல்ல; பார்வைக்கு வாழைமரம்போல் இருந்தது. அவ்வளவுதான். ஆனால் அதன் உடல் முழுவதும் ஒரே முத்தும் பவழமும் பதித்து வைத்ததைப்போல் பளபளவென்று மின்னியது. அவன் கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு பார்த்தான். என்ன அதிசயம்! அந்த மரத்திலிருந்து உதிர்ந்த முத்துக்களும் பவழங்களும் கீழே குவிந்து கிடந்தன!

அவைகளை அள்ளிக்கொண்டு பூலோகத்துக்குப் போனால் எவ்வளவு பணக்காரன் ஆகலாம்! அப்படி அள்ளிக்கொண்டு போனால் யாரும் கேட்க மாட்டார்களோ? அந்த மரத்துக்குக் காவல் யாரும் இல்லையோ? அது என்ன உலகம்?

அதைப்பற்றி அவன் யோசிக்குமுன் இன்னோர் அதிசயம் அவனுடைய கவனத்தைக் கவர்ந்தது. "உஸ்!" என்று ஒரு சீறல் சத்தம் கேட்டது. சத்தம் வரவர சமீபித்து வந்தது. ஆனால் எங்கிருந்து வருகிறது என்று மாத்திரம் தெரியவில்லை. நாலு பக்கமும் திரும்பித் திரும்பிப் பார்த்தான்.

அப்போது ரொம்ப தூரத்தில் ஏதோ ஒரு வஸ்து அவனை நோக்கி வேகமாக வருவதைப் பார்த்தான். முதலில் அது உயிருள்ள ஜந்து என்றே அவன் நினைக்கவில்லை. பார்வைக்கு இலைகள் உதிர்ந்த மரக்கிளை ஒன்று காற்றில் வருவதைப்போல் இருந்தது. சமீபத்தில் வரவரத்தான் அது ஜீவன் உள்ள ஒரு பிராணி என்பதை அறிந்தான்.

ஏழடி உயரத்துக்கு ஒரு சிலந்திப் பூச்சி நின்றால் எப்படி இருக்கும்? அப்படி இருந்தது அந்த விசித்திரப் பிராணி. நீண்ட இரு பற்களை வெளியே நீட்டி, அதன் அங்கங்களை வீசிக்கொண்டு வருவதைப் பார்த்தால் ஆயிரம் கைகள் உள்ள ஓர் அசுரன் நடந்து வருவதைப்போல் பயங்கரமாக இருந்தது.

அது கிட்டத்தில் வர வர அவனைப் பீதி பிடித்துக் கொண்டது. எப்படி அதனிடமிருந்து தப்புவது? அந்த வாழைமரத்தில் ஏறுவோம் என்றால் அது மரத்தைவிட உயரமாய் இருந்தது.

"ஐயையோ! சிவனே என்று வீட்டில் இருந்திருந்தால் இந்த ஆபத்து வந்திருக்காதே. கடவுளே! என்ன

செய்வேன்?" என்று ஏங்கினுன்.

அவன் யோசித்துக்கொண்டிருக்கும் போதே அந்த ஆயிரங்கால் பிராணி நெருங்கி வந்துவிட்டது. 'உஸ்', 'உஸ்' என்று அது போடும் சத்தம் அவனுடைய காதுக்கு வெகு சமீபத்தில் கேட்கத் தொடங்கிற்று. அவன் ஒன்றும் புரியாமல் ஓடத் தொடங்கினுன்.

சுந்தரம் எப்போதுமே ஓட்டத்தில் கெட்டிக்காரன். வருஷா வருஷம் அவனுடைய வகுப்பில் நடக்கும் ஓட்டப் பந்தயத்தில் அவன் தான் முதல் பரிசு வாங்குவது வழக்கம். அதற்காக அவனுக்கு 'ஓடுகாலி' என்ற பட்டப் பெயர்கூட உண்டு. ஆனல் இன்று அவனுடைய சாமர்த்தியமெல்லாம் அந்த ராட்சஸ ஜந்துவிடம் பலிக்கவில்லை. அவனை விழுங்கிவிடுவதைப் போல் அது பாய்ந்துகொண்டு வந்தது.

அவன் உயிருக்குப் பயந்துகொண்டு குடல் தெறிக்க ஓடினுன். அவன் ஓட ஓட அந்த ஜந்துவும் அவனை நெருங்கிக்கொண்டே வந்தது. அதன் கோரமான கர்ஜனை அவன் காதில் மிகவும் சமீபத்தில் விழுந்தது. அதனுடைய ஆயிரம் விஷக் கரங்களில் ஒன்று அவனைத் தீண்டிற்று. அவன் "ஐயோ!" என்று அலறிக்கொண்டு கீழே சாய்ந்தான். அவ்வளவுதான். அவனுக்கு நினைவு தவறிவிட்டது.

(தொடரும்)

★ நட்சத்திரங்கள் ★

ஆகாய வெளியில் நம் கண்ணுக்குத் தெரியாமல் எவ்வளவோ நட்சத்திரங்கள் இருக்கின்றன. அவற்றை மிகப் பெரிய தூரதிருஷ்டிக் கண்ணுடி மூலமாகத்தான் பார்க்க முடியும். கண்ணுக்குத் தெரியாத அந்த நட்சத்திரங்களைச் சுற்றியுள்ள மண்டலத்தில் மேலும் பல நட்சத்திரக் கூட்டங்கள் இருக்கின்றனவாம். அப்படி, ஆகாய வெளியில் மொத்தம் 2,000,000 × 1000,000,000 × 1000,000,000, 000,000,000,000,22,000,000,000,000,000,000,000,000,000 நட்சத்திரங்களுக்கு மேல் இருக்கின்றன என்று ஒரு வான சாஸ்திரி கூறுகிருர். எங்கே, இந்த எண்ணிக்கையை வாசித்துப் பாருங்கள் பார்க்கலாம்!

★ ★ ★ ★ ★

பிச்சைமுத்து

பி. ஆர். ஆர்.

பிச்சைமுத்து சுத்தச் சோம்பேறி. அவன் பள்ளிக்கூடமே போகமாட்டான். தினந்தோறும் பள்ளிக்கூடத்துப் பெஞ்சுக்குப் பாரமாக அவன் இருந்துவிட்டு வருவான். இதைப் பார்த்த அவனுடைய அப்பாவும் அம்மாவும், 'இவனை எங்கேயாவது வேலைக்கு அனுப்ப வேண்டும்' என்று நினைத்தார்கள்.

பிச்சைமுத்துவின் அம்மா ஒரு சீமானிடம் அவனை அழைத்துக்கொண்டு போய், "ஐயா, என் பிள்ளையை வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டும். எந்த வேலையாயினும் சரி. நாங்கள் பரம ஏழைகள்" என்று சொன்னாள்.

அதற்கு அந்தப் பணக்காரர் பிச்சைமுத்துவைப் பார்த்து, "உனக்கு என்ன வேலையடா தெரியும்?" என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பையன், "காக்காய் மாதிரி 'கா! கா! கா!' என்று காக்காய் கத்தத் தெரியும். 'கொக்கரக் கோ கோ!' என்று கோழி கத்தத் தெரியும். 'ஆங் ஏங்! ஆங்! ஏங்!' என்று கழுதை கத்தத் தெரியும். 'ளொள், ளொள், வெள், வெள்!' என்று நாய்போல் குலைக்கத் தெரியும்" என்று தன் கை வரிசையை அவரிடம் காட்டினான். இப்படி நாய், பூனை மாதிரி கத்துகிறவனை யாராவது வேலைக்கு

யாது. எனக்கு உதட்டில்புண்" என்று சொல்லி விட்டாள். கடைசியாகப் பிச்சைமுத்து தான் சந்தைக்குப் போக வேண்டிய தாயிற்று.

"அடே, நல்ல விலை வந்தால் கொடு, இல்லாவிட்டால் ஓட்டிக்கொண்டு வந்துவிடு" என்று அம்மா சொன்னாள்.

"அடே அப்பா, வழியில் திருடர்கள் இருப்பார்கள். ஜாக்கிரதையாக வந்து சேரு" என்றார் அப்பா.

பிச்சைமுத்து கடாரிக் கன்றை ஓட்டிக் கொண்டு சந்தைக்குப் போகிற பாதையில், "தரனனத்தோம்! தந்தனத் தோம்! ததிங்கிணத் தோம்! தரனனத் தோம்! தந்தனத் தோம்!" என்று வாய்க்கு வந்தபடி பாடிக் கொண்டே சென்றான். கன்றுக் குட்டியையும் "டுர்! இயா! கியா!" என்று ஓட்டிக் கொண்டு ஆர்ப்பாட்டமாகச் சந்தைக்குப் போய்ச் சேர்ந்தான்.

போனவுடன், கன்றுக்குட்டியை எங்கே நிற்கவைக்கலாம் என்று இடம் பார்த்தான். ஓர் இடத்தில் கன்றுக்குட்டிகள்

வைத்துக் கொள்வார்களா? "வேலை ஒன்றும் இல்லை" என்று அவர் சொல்லிவிட்டார்.

பிச்சைமுத்துவின் அம்மா என் பிள்ளைக்காக வேலை தேடாத இடமே இல்லை. எங்கும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. வீட்டிலோ சாப்பாட்டுக்கு மணி அரிசிகூட இல்லை. அப்பாவும் அம்மாவுமாக என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். முடிவில் தங்கள் வீட்டில் இருந்த கடாரிக் கன்றுக் குட்டியைக் கொண்டு போய்ச் சந்தையிலே விற்று, வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்க வேண்டும் என்று நினைத்தார்கள்.

அப்பாவோ, "எனக்கு வாதம்; என்னால் சந்தைக்கு நடந்து போக முடியாது" என்றார்.

அம்மாவோ, "என்னால் அவ்வளவு தூரம் நடக்க முடி

எல்லாம் வரிசையாக நிறுத்தி இருந்தன. அவன் தன் கன்றுக் குட்டியையும் அங்கே கொண்டுபோய் நிறுத்தினால் நல்ல விலை கிடைக்காது என்று நினைத்துக்கொண்டு, பெரிய ஓங்கோல் மாடுகளும் நெல்லூர்ப் பசுக்களும் கட்டியிருந்த இடத்தில் அதைக் கட்டினான். அங்கே வந்திருந்தவர்கள் பெரிய பெரிய பசுக்களுக்கு விலை பேசினார்களே தவிர, அவன் கன்றுக் குட்டியை யாருமே திரும்பிப் பார்க்கவில்லை.

அவன் அங்கே வந்தவர்களையெல்லாம் கூப்பிட்டு, "ஹோ! ஹோ! இந்த மாட்டைப் பார் ஐயா! என் மாட்டைப் பார், ஐயா!" என்று கத்திக் கொண்டு இருந்தான். அப்போது சந்தைக்கு வந்த போக்கிரிகளில் ஒருவன் ஒரு பெரிய கிழட்டுப் பன்றியைக் கர கர என்று கட்டி இழுத்துக் கொண்டு வந்தான். அந்தப் போக்கிரி தன் பன்றியைச் சுட்டிக் காட்டி, "ஹோ! ஹோ! இந்தப் பெரிய மாட்டைப் பாருங்கோ!" என்று சத்தம் போட்டான்.

அப்போது பிச்சைமுத்து, "ஏ முட்டாள், அது மாடா! பன்றி அல்லவா?" என்றான்.

அதற்கு அந்தப் போக்கிரி, "உன் மாட்டுக்கு என் மாடு தோத்துப்போச்சோ? என் மாடு பாடறமாதிரி உன் மாடு பாடுமா?" என்று சொல்லி அதன் காதைப் பிடித்து முறுக்கினான்.

அப்போது அந்தப் பன்றி, "ஞொய்! ஞொய்! ஞை! ஞை!" என்று கத்தத் தொடங்கிற்று.

அப்போது அந்தப் போக்கிரி, "அப்படிக் கத்து! இன்னும் கத்து! இத்தனை நாளாய்க் கத்தாமல் இருந்து என் குடியைக் கெடுத்தாயே! இனி மேலாவது என் வீட்டில் பணம் குவியட்டும்" என்று சொன்னான்.

அதைக் கேட்ட பிச்சைமுத்து, "அதென்னப்பா? பன்றி கத்தினால் வீட்டில் எப்படியப்பா பணம் குவியும்?" என்று கேட்டான்.

அதற்கு அந்தப் போக்கிரி, "என் மாட்டினுடைய குண விசேஷம் அப்பா அது. கத்துகிற அன்றைக்கு வீட்டிலே கால் படி சவரனைக் குவிந்து விடும்" என்று தன் பன்றியின் விசேஷங்களை அடுக்கத் தொடங்கினான். உடனே பிச்சைமுத்து தன் கடாரிக் கன்றை வாங்கிக்கொண்டு அதற்குப் பதிலாகக் கிழட்டுப் பன்றியைத் தரும்படி அவனைக்

கெஞ்சினான். அந்தப் போக்கிரி அதுதான் சமயம் என்று நினைத்து, பன்றியைக் கொடுத்துவிட்டுக் கடாரிக் கன்றை வாங்கிக்கொண்டு நழுவியே போய்விட்டான்.

பிச்சைமுத்து தன் சாமர்த்தியத்தைத் தானே மெச்சிக் கொண்டான். பன்றியை ஓட்டிக்கொண்டு ஜம்பமாய் ஊரைப் பார்த்து நடந்தான். வழி நெடுக அந்தக் கிழட்டுப் பன்றியைக் கத்த வைத்துக் கொண்டே, "அப்படிக் குவியட்டும் என் வீட்டில் பவுனும் சவரனும்" என்று சொல்லிக் கொண்டே போனான்.

இப்படிப் போய்க்கொண்டிருக்கும் பொழுது, எதிரில் ஒருவன் ஓலை ஊதல் ஒன்றை ஊதிக்கொண்டு வந்தான்.

அவனைப் பார்த்து, "அதென்ன அப்பா வாத்தியம்?" என்று கேட்டான் பிச்சைமுத்து. அதற்கு அவன், "இது மாடமாளிகை, கூடகோபுரம் கட்டும் ஊதல்" என்று சொன்னான்.

பிச்சைமுத்து, "நம் வீட்டில் இதற்குள் நூறு வருஷத்துக்குப் போதுமான பணம் குவிந்திருக்கும். இனிமேல் நமக்கு வேண்டியது மாடமாளிகையும் கூடகோபுரமுந்தான்" என்று நினைத்துக்கொண்டு அவனிடம் வாதாடி வழக்காடித் தன் கிழட்டுப் பன்றியைக் கொடுத்து, அந்த ஊதலை வாங்கி வழி நெடுக ஊதிக் கொண்டே போனான்.

அப்போது எதிரே ஒருவன் கைவிரலாலே சொடக்குப் போட்டுக்கொண்டே வந்தான். பிச்சைமுத்து அவனைப் பார்த்து, "இதென்ன வித்தை அப்பா?" என்று கேட்டான்.

அதற்குச் சொடக்குக்காரன், "இப்படிச் சொடக்குப் போட்டு எந்த ராஜகுமாரி

யைப் பார்த்துக் கூப்பிட்டாலும், கட்டின பசுப்போல் உன் பின்னலேயே வந்துவிடுவாள். அவளை உன் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய்க் கல்யாணம் பண்ணிக்கொள்ளலாம்" என்று சொன்னன்.

உடனே பிச்சைமுத்து தன் கையில் இருந்த ஓலை ஊதலை அவனிடம் கொடுத்துவிட்டு, அந்தச் சொடக்குப் போடும் வித்தையைக் கற்றுக்கொண்டான். உடனே நேராய் அரண்மனையைப் பார்த்து நடந்தான். அப்போது அரண்மனை உப்பரிகையில் ராஜகுமாரி உலாவிக்கொண்டிருந்தாள். அவளைக் கண்டு பிச்சைமுத்து கைச் சொடக்குப் போட்டுக் கூப்பிட்டான்.

அதைக் கண்ட சேவகர்கள் ஓடிவந்து, "எங்கள் ராஜகுமாரியைப் பார்த்துக் கைச் சொடக்கா போடுகிறுய், கழுதை?" என்று சொல்லி அவனை அடித்து ஓட்டினர்கள்.

அப்போது பிச்சைமுத்து, "எங்க அப்பா ஆணை, எங்க அம்மா ஆணை, நான் கைச் சொடக்குப் போட மாட்டேன்" என்று சொல்லிக்கொண்டே வீட்டைப் பார்த்து ஓடிவந்தான். அவன் வீட்டுக்கு வந்ததும் அவனுடைய அப்பாவும் அம்மாவும், "கடாரிக்கு என்னடா விலை கிடைத்தது?" என்று கேட்டார்கள்.

"எங்க அப்பா ஆணை, எங்க அம்மா ஆணை, நான் ஒரு நாளும் கைச் சொடக்குப் போடமாட்டேன்" என்று அவன் ஓயாமல் சொல்லிக்கொண்டே இருந்தான்.

சமுத்திர ஜலப் ஏன் உப்பாய் இருக்கிறது?

சூரியன் சமுத்திரத்திலிருந்து நீரை மட்டுமே ஆவியாக மாற்றி இழுக்கிறது. அந்த நீராவி மழையாக மாறி ஆறுகளின் வழியாக மறுபடி சமுத்திரத்துக்கு வந்து சேருகிறது. சமுத்திரத்தில் கரைந்திருக்கும் உப்பைச் சூரியன் இழுப்பதில்லை. வெறும் ஜலத்தை மட்டும் இழுக்கிறது. ஆனல் ஆறுகளிலிருந்துதான் சமுத்திரத்துக்கு உப்பு வந்து சேருகிறது. நிலத்திலிருந்து பலவித உப்புக்களைக் கரைத்துக் கொண்டு ஆறுகள் சமுத்திரத்தில் வந்து கலக்கின்றன. ஆற்று ஜலத்தில் உள்ள உப்பு மிகவும் சொற்பம். அதனல் அது நமக்குத் தெரிவதில்லை. ஆறுகள் வெகு காலமாய் நிலத்தின் உப்பைச் சமுத்திரத்தில் கொண்டு சேர்த்துக் கொண்டிருப்பதனல் தான் சமுத்திர ஜலத்தில் நிறைய உப்பு இருக்கிறது.

ஜப்பான்

ச. கு. கணபதி ஐயர்

எங்கள் கீல் குதிரையில் ஏறிக்கொண்டு ஆசியாவின் கிழக்குக் கோடியிலுள்ள ஒரு தீவுக்குச் சென்றோம். அங்கே ஓரிடத்தில் குதிரையை நிறுத்திவிட்டு நகருக்குள் போனோம். பலர் அங்கும் இங்கும் போய்க்கொண் டிருந்தார்கள். மஞ்சள் நிறம், கோழி முட்டை வடிவமான முகம், வளைந்த புருவம், நீண்ட கோடு போன்ற குறுகிய கண்கள், தட்டை மூக்கு. 'மங்கோலியர் இனம்' என்ற ஜாதியார் இவர்களே. நண்பன், "ஆம்; இதுதான் ஜப்பான் தேசம்; இவர்கள் ஜப்பானியர்கள்" என்றான்.



எங்கும் வேடிக்கையும் விநோதமுமாக இருந்தது. கட்டிடங்கள் தோறும் கொடிகள் பறந்துகொண் டிருந்தன. கொடிகளில் சூரியன் உதிப்பதுபோல் எழுதியிருந்தது. "ஜப்பானியர் தங்கள் தேசத்தை, 'சூரியன் உதிக்கும் நாடு' என்பார்கள். அதனால் அவர்களுடைய கொடியில் உதய சூரியன் இருக்கிறது" என்றான் நண்பன்.

ஓர் இடத்தில் ஒரு சிறுவனும் சிறுமியும் அழகாக உடுத்துக் கொண்டு கை நிறை

ஜப்பானிய எழுத்துக்கள்

யக் காகிதப் பொம்மைகளும் பலூன்களும் வைத்துக்கொண்டு சென்றார்கள். நான் அவர்களை, "இங்கே என்ன விசேஷம்?" என்றேன்.

"இன்று வைசாக பௌர்ணமி. எங்களுக்கு இது விசேஷமான பண்டிகை. நாங்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள்" என்று சிறுவன் மரியாதையாகச் சொன்னான். அவனுடன் இருந்த சிறுமி, "நீங்கள் இந்தியர்கள்போல் தோன்றுகிறதே! இந்திய யானையைப்பற்றி எங்களுக்குத் தெரியும்" என்றாள்.

அதற்கு நான், "ஆம்; இந்த ஜப்பான் தேசத்தைப் பார்க்க வந்திருக்கிறோம்" என்றேன்.

பிறகு பையன், "என் பெயர் கினோ; இவள் என் தங்கை ஜியா. நீங்கள் எங்களுடன் வாருங்கள்; எங்களுடன் தங்கியிருந்து பார்க்க வேண்டியவைகளைப் பார்க்கலாம்" என்றான். நாங்கள் அவர்களுடன் சென்றோம்.

வீதிகள் ஒழுங்காக இருந்தன. மின்சாரம், தந்தி, டெலிபோன் கம்பிகள், கார்கள் எல்லாம் நாகரிகத்தின் உயர்வைக் காட்டின. ஆனால் உயர்ந்த மாடி வீடு ஒன்றுகூட இல்லை. நான் ஆச்சரியம் கொண்டு, "இந்த நாட்டில் மாடி வீடே இல்லையா! சுவர்களைக்கூடக் காகிதத்தால் கட்டியிருக்கிறார்களே!" என்றேன்.

கினோ, "இந்த நாட்டில் அவிந்துபோன பல எரிமலைகள் இருக்கின்றன. அடிக்கடி எரிமலை விபத்தும் பூகம்பமும் இங்கே வருவதுண்டு. பூகம்பம் வந்தால் வீடுகள் அதிர்ச்சியினால் விழுந்துவிடும். அதனால் கற்களால் வீடுகட்ட மாட்டோம். மூங்கிலையும் தண்ணீரில் நனையாத காகிதங்களையும் கொண்டு சுவர் வைத்து லேசாக வீடுகளை அமைக்கிறோம்" என்றான்.

"பூகம்பமா! அதனால் எத்தனையோ பேர் செத்துவிடுவார்களே!" என்றேன். அதற்கு ஜியா, "எங்களுக்கு எரிமலைகளைப்பற்றியும் பூகம்பத்தைப்பற்றியும் பயமே கிடையாது; சாவுக்கு அஞ்சக்கூடாது என்று எங்களுக்குப் பள்ளிக்கூடத்தில் கற்றுக் கொடுக்கிறார்கள்" என்றாள்.

என் நண்பன், "எல்லாரும் பட்டாடைகளையே உடுத்திருக்கிறார்களே! இது பணக்காரர் தேசம்போல் இருக்கிறது"

என்றான். அதைக் கேட்டு ஜியா, "இங்கே பட்டு மிகுதியாக உற்பத்தியாகிறது. பட்டுப் பூச்சி வளர்ப்பு எங்கள் நாட்டில் முக்கியமான ஒரு தொழில். பஞ்சாடை, கம்பளி ஆடை இவைகளுக்குத்தான் இங்கே விலை அதிகம்! பட்டு விலை ரொம்ப மலிவு" என்றாள்.

பிறகு அவர்களுடைய வீடு வந்து சேர்ந்தோம். "எங்கள் வீடுகளில் நாற்காலி, மேஜை ஒன்றும் இராது. தரையில் எப்பொழுதும் பாய் விரித்திருக்கும். நாங்கள் தரையில்தான் உட்காருவது" என்றான் கினோ. நாங்கள் கைகால்களை அலம்பிக் கொண்டோம். சாப்பிட எல்லோரும் வட்டமாக உட்கார்ந்து கொண்டோம். ஒவ்வொருவர் முன்னும் ஒரு தட்டும் இரண்டு குச்சிகளும் வைத்தார்கள். நடுவில் பல பீங்கான் பாத்திரங் களில் சோறு, காய்கறி, மீன் குழம்பு, முட்டை, இறைச்சி இவைகளைப் பொதுவில் வைத்தார்கள். "நாங்கள் சாப்பிடும் முறை இது; இஷ்டமான பதார்த்தங்களை நீங்கள் குச்சிகளால் எடுத்து உங்கள் தட்டில் போட்டுக்கொண்டு எங்களைப்போல் சாப்பிடுங்கள். நாங்கள் ஆகாரத்தை விரல் களால் தொடவே மாட்டோம்" என்றாள் கினோவின் தாய். "குச்சிகளால் சாப்பிடுவது உங்களுக்குக் கஷ்டமாக இல்லையா?" என்றான் என் நண்பன். கினோவின் தகப்பனார் சிரித்துக்

ஜப்பானியக் குழந்தைகள் சாப்பிடுதல்

கொண்டே, "சில நாள் போனால் உங்களுக்கும் இந்த முறை வழக்கமாய் விடுகிறது! சங்கோசமில்லாமல் சாப்பிடுங்கள்" என்றார்.

"எங்களைப் போல் உங்கள் தேசத்திலும் அரிசிதான் முக்கியமான உணவோ?" என்றேன் நான். கினோ, "ஆம். நெல்தான் இங்கே முக்கியமான பயிர். வைக்கோல், உமி இவைகளைக் கூட நாங்கள் வீணாக்குவதில்லை. எங்கள் மேலங்கி, குடை, செருப்பு, தலையணை எல்லாம் இவைகளால் செய்தவை. நாங்கள் மிகவும் சிக்கனமுள்ளவர்கள். எங்கள் கிராமங்களில் வைக்கோல் வேய்ந்த குடிசைகள்தான் இருக்கும்" என்றான்.

ஜப்பானியக் கோயில்

சாப்பிட்ட பிறகு கினோவின் அறைக்குள் சென்றோம். புத்தகங்கள் ஒழுங்காக இருந்தன. எங்கும் சுத்தம். அங்கே ஒரு பை அழகாக இருந்தது. என் கண்கள் அதை நோக்கின; கினோ அதைக் கவனித்து, "நாங்கள் புத்தகங்களை இந்தப் பையில் போட்டு முதுகில் மாட்டிக்கொண்டு பள்ளிக்கூடம் போவது வழக்கம்" என்றான். "எங்கள் நாட்டில் எட்டு வருஷம் ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் கட்டாயம் படித்தே ஆகவேண்டும். அதன் பின் இஷ்டம் இருக்கிறவர் இரண்டு வருஷம் உயர்தரப் பள்ளிக்கூடத்தில் வாசித்துவிட்டுக் கல்லூரிக்குச் செல்லவேண்டும்" என்று அவன் விளக்கினான்.

எழுத்துக்கள் பொம்மைகளைப் போல் இருந்தன. முதலிலிருந்து பக்கங்களைத் திருப்பினேன். கினோ சிரித்துக் கொண்டே, "புத்தகத்தைத் தலைகீழாக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்! உங்களுக்குக் கடைசிப் பக்கமே எங்களுக்கு முதல் பக்கம்; வரிகள் உங்கள் புத்தகங்களில் இருப்பனபோல் குறுக்கு வரிசையில் இல்லை; செங்குத்தாக இருக்கின்றன; படிக்கும் போது வலப்புறம் இருந்துதான் இடப்புறம் செல்ல வேண்டும்" என்றான்.

"ஒவ்வோர் எழுத்தும் பொம்மை மாதிரி இருக்கிறதே! எழுதுவது கஷ்டமல்லவா?" என்றான் என் நண்பன். "எழுத்து வேலை கஷ்டந்தான். நாங்கள் நன்றாக எழுதக் கற்றுக் கொள்வதற்குள் சில வருஷம் ஆகிவிடும். நாங்கள் 'பிரஷ்' என்ற

தூரிகையை நீரில் நனைத்து இங்கி வில்லையின் மேல் தடவி எழுத்துக்களைச் சித்திரம் போல் தீட்டுகிறோம். இங்கி புட்டிகளையும் பேனாக்களையும் உபயோகிப்பதில்லை'' என்றான் கினோ.

நான், “இது என்ன புத்தகம்?'' என்றேன். அதற்கு அவன், “இது தேச சரித்திரம். எங்களுக்குச் சரித்திர பாடம் முக்கியமானது. இது எங்கள் தேசபக்தியை வளர்க்கிறது. நாங்கள் வெளி தேசங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளாமல் இருந்து வந்தோம். அமெரிக்கா, ஐரோப்பாக் கண்டங்களின் வெள்ளைக்காரர்கள் விஞ்ஞான சாத்திரத்தில் பல நூதன ஆராய்ச்சிகள் செய்து பல தேசங்களைப் பிடித்துக் கொண்டு ஆளுவதைப் பார்த்து, எங்களுக்கு விழிப்பு ஏற்பட்டது. பிறகு நாங்கள் ரோஷம் கொண்டு மேல் நாட்டாரின் நடை உடை பாவனைகளைப் பின்பற்றி, விஞ்ஞானத் துறையில் கைதேர்ந்து, இந்த அறுபது வருஷங்களுக்குள் உயர்ந்துவிட்டோம். இந்த உலக மகா யுத்தத்தில் நாங்கள் பல இடங்களைப் பிடித்துவிட்டோம். எங்களிடம் அணுகுண்டு இல்லை. அதனால் அமெரிக்கர்களின் அணுகுண்டுக்குப் பணிந்து போக நேர்ந்தது. இப்பொழுது அவர்கள் ஆதிக்கத்தில் ஜப்பான் இருக்கிறது'' என்றான். அவன் கண்களில் இரண்டொரு நீர்த்துளிகள் வந்தன. உடனே அவன், “ஆனாலும் மோசமில்லை; இன்னும் சில வருஷங்களில் சுதந்தரம் பெற்று நாங்கள் பழையபடி உயர்வடைந்துவிடுவோம்'' என்று கூறினான்.

ஜப்பான் சிறுவர் தேசபக்தி மிகுந்தவர் என்பது அப்பொழுது எங்களுக்கு நன்றாக விளங்கியது. நாங்கள் சில நாள் ஜப்பானைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கீல் குதிரையில் ஏறிக்கொண்டு வந்துவிட்டோம். ஜப்பானை நினைக்கும் போது தேசபக்தி, சுத்தம், சிக்கனம், விடாமுயற்சி இந்த நான்கு உத்தம குணங்கள் இப்பொழுதும் என் கண்முன் நிற்கின்றன.



குழந்தை ரவி

கி. வா. ஜகந்நாதன்

7 வயது

உங்களுக்கு ஞாபக சக்தி இருக்கிறதோ? அப்படியானல் நான் ஒரு பாட்டைச் சொல்கிறேன்; அதை எங்கேயாவது கேட்டிருக்கிறீர்களா என்று யோசித்துச் சொல்லுங்கள்.

'ஜன கண மன அதி
நாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா'

ஹோ, ஹோ, ஹோ - நீங்கள் கண்டு பிடித்துவிட்டீர்கள்! ரேடியோவிலே கேட்டது உங்களுக்கு ஞாபகத்துக்கு வருகிறது. சினிமாவிலே கேட்டதும் நினைவுக்கு வருகிறது. இன்னும் எங்கெங்கோ கேட்டிருக்கிறீர்கள்.

இந்தப் பாட்டு சுதந்தரக் குடியரசாகிய நம்முடைய பாரத நாட்டின் கீதம்; தேசிய கீதம் என்று சொல்லுவார்கள்.

இதைப் பாடினவர் ரவீந்திரநாத டாகுர் என்பவர். அவர் இப்போது இல்லை. நீண்ட தாடியோடு இருக்கும் அவர் படத்தை நீங்கள் எந்தப் புத்தகத்திலாவது பார்த்திருக்கலாம். அவர் பெரிய கவிஞர். அழகழகாகக் கவி பாடுவார். மேல்நாட்டுக்காரர்கள் அவர் பாட்டை மெச்சி நோபேல் பரிசு என்ற பெரிய பரிசை வழங்கினார்கள்.

நீண்ட தாடிக்காரராகிய அவர் பிறக்கும்போதே தாடிக்காரராகிவிட்டாரா, என்ன? இல்லை, இல்லை. அவரும் உங்களைப்போலக் குழந்தையாக இருந்தார். மாணக்கனாக இருந்தார். அப்போதெல்லாம் அவர் மிகவும் சாது. பள்ளிக்கூடத்துக்குப் போகிறதென்றாலே அவருக்கு வேப்பங்காயாக இருக்கும்.

பெரிய பணக்காரக் குடும்பத்திலே பிறந்தவர் ரவீந்திரர். கல்கத்தாவில் அவர்களுக்குப்

பிரம்மாண்டமான வீடு இருந்தது. அவருக்குப் பல தமையன்மார். வீடு முழுதும் சொந்தக்காரர்களும் வேலைக்காரர்களும் நிறைய இருப்பார்கள். எப்போதும் ஜே ஜே என்றிருக்கும் வீடு.

குழந்தை ரவிக்குக் கூட்டத்திலே இருப்பதென்றால் பிடிப்பதில்லை. தனியாகப் போய் உட்கார்ந்துகொள்வார். என்ன என்னவோ யோசித்துக் கொண்டே இருப்பார். அவர்கள் வீட்டில் பழங் காலத்துப் பல்லக்கு ஒன்று இருந்தது. முன்பு அதன் மேல் பெரிய மனிதர்கள் ஏறிப் போவார்கள். 'ஹம் ஹூம்' என்று சொல்லிக்கொண்டே வேலைக்காரர்கள் அதைத் தூக்கிக் கொண்டு போவார்கள். இப்போதோ அதன் மேல் யாரும் ஏறுவதே இல்லை. அதை ஒரு மூலையிலே வைத்திருந்தார்கள். குழந்தை ரவி அதைக் கண்டார். அதன் மேல் அவருக்குப் பிரியம் உண்டாயிற்று. யாரும் தொந்தரவு பண்ணுமல் சுகமாக உட்காரலாம் என்று எண்ணினுர்.

பல்லக்கிலே போய் உட்கார்ந்தார். அவருக்குக் கரைகாணு ஆனந்தம் உண்டாயிற்று. பல்லக்கைத் தூக்க ஆள் இல்லை. அதில் அவர் ஏறிப் பிரயாணம் செய்ய முடியாது. ஆனுலும் அவருக்கு அதிக ஆனந்தம் உண்டாயிற்று. ஏன் தெரியுமா? அவர் அதைப் பல்லக்காகவே நினைக்கவில்லை. ஒரு பெரிய சமுத்திரம். அதன் நடுவிலே ஒரு சிறிய தீவு. அங்கே ஒரு வீரன் காவலிலிருந்து தப்பி ஓடிவந்துவிட்டான். யாருடைய தொந்தரவும் இல்லாமல் அந்தத் தீவிலே தனிக் காட்டு ராஜாவாக வாழ்கிருன். ரவி அந்த வீரனுக ஆகிவிடுகிருர். பல்லக்கே தீவாகிவிடும்.

திடீரென்று அந்தத் தீவு மாறிவிடும். பல்லக்குத் தானுகவே பறக்க ஆரம்பித்துவிடும். நிஜமாக அல்ல. எல்லாம் மனசிலே நினைத்துக்கொள்கிறதுதான். பல்லக்குப் போய்க் கொண்டே இருக்கும். ரவி பல தேசங்களைக் கடந்து போவார். அவர் பாட புத்தகத்தில் என்ன என்னவோ தேசங்களைப்பற்றியெல்லாம் வாசித்திருந்தார். அந்தத் தேசங்களைப் பார்த்துக்கொண்டே அவர் பிரயாணம் செய்வார். அப்புறம் காடு வரும். காட்டிலே புலி வரும். குழந்தை ரவி சிறிது நடுங்குவார்.

இப்படியெல்லாம் மனசிலே கற்பனை செய்துகொள்வார் ரவி. போது போனதே தெரியாமல் அந்தப் பழைய பல்லக்கில் அவர் மனம் போனபடியெல்லாம் பாவனை செய்வார்.

ரவியினிடம் ஒரு மரச் சிங்கம் இருந்தது. மரத்தினுல்

ஒரு கத்தியும் வைத்திருந்தார். நவராத்திரி வந்தது. சிங்கத்தைப் பலி கொடுத்தால் அற்புதமான சக்தி கிடைக்கும் என்று யாரோ பேசிக் கொண்டார்கள். ரவியின் காதில் அது விழுந்தது. அந்த அற்புத சக்தியை அடைய நிச்சயித்தார். சிங்கத்தைப் பிடித்துக்கொண்டார். மரச் சிங்கந்தான்; பொம்மைச் சிங்கம். ஆனாலும் அவர் மனசுக்குள்ளே நினைத்தால் நிஜச் சிங்கம் ஆகிவிடுமே. அதை மரக் கத்தியினால் லொட்டு லொட்டு என்று அடிப்பார். கத்தியிலே கூர்மை ஏது? ஆகையால் லொட்டு லொட்டு என்றுதான் சத்தம் கேட்கும். பலி கொடுத்தால் மந்திரம் சொல்லவேண்டாமா? அவரே அந்த மந்திரத்தைப் புதிதாகக் கட்டினார்.

உல்குட் டேல்குட்
ட்யாம் குங்குட்
ஆக்ரோட் பாக்ரோட்
கட் கட் கடாஸ்
பட் பட் படாஸ்

இதுதான் அவர் கட்டின மந்திரம். இதற்கு என்ன அர்த்தம் என்று எனக்குத் தெரியாது. ரவிக்குக்கூடத் தெரியாது.

* * *

ரவீந்திரர் வீடு மிகவும் பெரியதென்று முன்பே சொன்னேன். அந்த வீட்டில் சில சமயங்களில் ராத்திரியில் நாடகம் நடைபெறும். நாடகக்காரர்கள் வந்து திரை கட்டி நாடகம் ஆடுவார்கள். ராத்திரி நெடுநேரம் நாடகம் நடக்கும். பெரியவர்களெல்லாம் போய்ப் பார்ப்பார்கள். அப்போது நடு நடுவே ரூபாயை மேடைமீது வீசி எறிவார்கள். அவர்களுக்கு நாடகத்தைக் கண்டு ஏற்பட்ட சந்தோஷத்துக்கு அது அடையாளம். நாடகக்காரர்கள் அந்த ரூபாயை எடுத்துக் கொள்வார்கள்.

ஒரு நாள் குழந்தை ரவியும் நாடகத்துக்குப் போயிருந்தார். அவர் கையிலே ரூபாய்களைக் கொடுத்து நடுநடுவே ஒவ்வொரு ரூபாயாகப் போடச் சொன்னார்கள். ரவிக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. ரூபா

14 வயது

யைக் கொஞ்ச நாழிகைக்கு ஒரு தரம் போட்டுக்கொண்டே வந்தார். குழந்தைதானே? எவ்வளவு நேரம் விழித்துக் கொண்டே இருப்பார்? கண் இமைகளைத் தூக்கம் இழுத்தது. தூங்கி வழிந்தார். அதைப் பார்த்து அவரை அப்படியே தூக்கிக்கொண்டு போய்ப் படுக்கையிலே விட்டு விட்டார்கள். மறு நாள் எழுந்து பார்த்தால் அவர் படுக்கையிலே இருக்கிறார். "நான் இங்கே எப்படி வந்தேன்? நாடகமல்லவா பார்த்தேன்? ரூபாயைப் போட்டேனே! எல்லா ரூபாயையும் போடவில்லையே!" என்று அம்மாவிடம் கேட்டார். "நீ நாடகம் பார்த்த அழகு போதும்! நீதான் தலையை அசைத்து அசைத்துத் தூங்கி விழுந்தாயே! உன்னைத் தூக்கிக்கொண்டு வந்து படுக்கையில் விட்டேன்" என்றாள் அம்மா. "அத்தனை பேரும் பார்க்கவா?" என்று ரவி கேட்டார். அம்மா, "ஆம்" என்றாள். ரவிக்கு ஒரே வெட்கமாகப் போய்விட்டது. "என்னைத் தூங்கு மூஞ்சி என்று அத்தனை பேரும் தெரிந்து கொண்டார்களே!" என்று வருத்தப்பட்டு முகத்தைக் கவிழ்த்துக்கொண்டார்.

*   *   *

ரவிக்குப் பல அண்ணன்மார்; பல மன்னிகள். ஒரு மன்னி சீன தேசத்துக் கரிக் குருவி ஒன்றை வளர்த்து வந்தாள். உல்லாசமாகப் பறந்து விளையாடுகிற பறவையைக் கூட்டில் அடைத்தது ரவிக்குப் பிடிக்கவில்லை. அது சத்தம் போட்டால் அவருக்கு வேதனையாக இருக்கும்.

மன்னிக்கு அணிற் பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள். ரவி அவளிடம் போய், "மன்னி, மன்னி, நீ தப்புக் காரியம் செய்கிறாய்" என்றார். "என்ன தப்பு?" என்று கேட்டாள். "குழந்தையைப் போல ஆனந்தமாக விளையாடும் அணிலைப் பார். அது கட்டுக் காவல் இல்லாமல் விளையாடுவது எவ்வளவு அழகாக இருக்கிறது? அதைப் பிடித்து வந்து சிறையில் அடைப்பதுபோல அடைக்கலாமா? அடைத்தால் அது சந்தோஷமாக இருக்குமா?" என்றார். மன்னிக்கு இதெல்லாம் காதில் விழவில்லை. "போடா பைத்தியக்காரா! மகா பெரியவன்போலப் பேச வந்துவிட்டான்!" என்று சொல்லிவிட்டாள்.

இரண்டு அணில்களைப் பிடித்து வந்து மன்னி வளர்க்க ஆரம்பித்துவிட்டாள். ரவீந்திரருக்கு மனசு மிகவும் கஷ்டப்பட்டது. ஒருவருக்கும் தெரியாமல் அந்த அணில்களை

எடுத்து வெளியிலே விட்டார். என்ன வந்தாலும் வரட்டும் என்ற துணிவோடேதான் அப்படிச் செய்தார். அப்போது அவர் மனசிலிருந்து ஏதோ பெரிய பாரம் குறைந்தது போல் இருந்தது.

விஷயம் மன்னிக்குத் தெரிந்தது. ரவியை வைதாள். அதை அவர் பெரிதாக எண்ண வில்லை. அந்த வசவு அன்றோடு போயிற்று. ஆனால் சிறைப் பட்ட அணிற் பிள்ளைகளோ விடுதலையடைந்து ஆனந்த மாகத் துள்ளிக் குதித்தன.

* * *

சின்ன வயசிலேயே ரவீந் திரர் சொந்தமாகக் கவிதை பாடினார். அவருக்கு ஒரு நாள் வேடிக்கையாக ஓர் எண்ணம் உண்டாயிற்று. தோட்டக் காரன் வர்ண வர்ணமான மலர்களைப் பறித்து வந்து பூக்கிண்ணங்களில் வைப்பான். கண்ணைப் பறிக்கும் அழகுள்ள பூக்கள், மென்மையான மலர் கள். "இந்த மலர்களைப் பிழிந்து அந்தச் சாற்றிலே பேனாவைத் தோய்த்துக் கவிதை எழுதினால் மிகவும் நன்றாக இருக்குமே!" என்ற எண்ணம் ரவிக்குத் தோன் றிற்று. பூக்களை எடுத்தார். கசக்கிப் பிழிந்தார். அதிலி ருந்து ஒரு துளிகூடச் சாறு கிடைக்கவில்லை. பிழிவதற்கு ஏதாவது யந்திரம் ஒன்றைச் செய்தால் என்ன என்று மற்றொரு யோசனை உண்டா யிற்று. அவருடைய அண்ணா விடம் சொன்னார். இந்தப் பைத்தியக்கார யோசனையைக் கேட்ட அவருக்குச் சிரிப்பு வந்தது. ஆனாலும் குழந்தை யின் ஆசையைக் கெடுக்கக் கூடாதென்று, ஒரு தச்சனைக் கூப்பிட்டார். மரத்தால் உரல் ஒன்றைப் பண்ணிக்கொடுக்கச் சொன்னார். ஒரு குழவியும் பண்ணச் சொன்னார்.

தச்சனிடம் அந்த இரண் டையும் பெற்ற ரவி தம் காரி யத்தை ஆரம்பித்தார். பூவை யெல்லாம் உரலில் கொட்டினார். குழவியினால் அரைத்தார். அப்போதும் மலரிலிருந்து ரஸம் கிடைக்கவில்லை. அவருக்கே சலித்துப் போ யிற்று. "இப்படி யெல்லாம் அரைத்தால் மலரில் சாறு வராது" என்று தெரிந்து கொண்டார்.

ரவி மலரின் சாற்றிலே தோய்த்துக் கவிதை எழுத வில்லை. ஆனால் அவர் எழுதின கவிதைகள் தேனிலே தோய்த்து எழுதியவைபோல இனிமையாக இருக்கும். இன்று ரவீந்திரர் என்றால் உலகமெல்லாம் தெரியும்.

அவரும் உங்களைப் போலக் குழந்தையாக இருந்தார், வேடிக்கை விளையாட்டெல் லாம் விளையாடினார் என்பதை நினைக்கும்போது, உங்களுக்கு ஆனந்தம் ஏற்படுகிறதல்லவா?

★ சுஜாதா ★

'சங்கரன்'

ராகுலன் மிகுந்த வருத்தத்துடன் வீட்டுக்கு வந்து உட்கார்ந்தான். தாங்கமுடியாத கவலையினால் தலையில் கையை வைத்துக்கொண்டான். அவனுடைய குமாரி சுஜாதா இதைக் கண்டு அவனை நெருங்கி, "அப்பா, ஏன் இப்படிச் சோகத்துடன் இருக்கிறீர்கள்? என்ன நடந்தது அரண்மனையில்?" என்று கேட்டாள்.

ராகுலனுக்கு வயதாகிவிட்டதே தவிர, கபடு சூது தெரியாது. வெள்ளை மனசு அவனுக்கு. இருந்தும் சக்கரவர்த்தியின் பணியாளாக இவ்வளவு நாட்களையும் கழித்துவிட்டான். ஆனால் இன்று சக்கரவர்த்தி ராகுலனைக் கூப்பிட்டு, "ராகுலா, சாவடியிலிருந்து ஒரு மந்தை ஆடுகளை ஓட்டிக் கொண்டுபோய் விற்றுவிட்டு, திரும்பும்போது பணத்துடனும் அதே ஆடுகளுடனும் வந்துவிடு" என்று கட்டளையிட்டான்.

இது எப்படி முடியும்? ஆடுகளை விற்கவும் வேண்டுமாம்! ஆனால் பணத்துடன் அந்த மந்தை ஆடுகளை ஓட்டிக் கொண்டும் வந்துவிடவேண்டுமாம்! சக்கரவர்த்தியின் உத்தரவுக்கு யாரானாலும் மறு வார்த்தை பேச முடியுமா?

ராகுலன் கலக்கமடைந்து சுஜாதாவிடம் நடந்ததைச் சொன்னான். சுஜாதா அழகும் துடிதுடிப்பும் கொண்ட யுவதி. தந்தை கூறியதைக் கேட்டு அவள் 'கலகல'வென்று சிரித்தாள்.

"ப்பூ! இவ்வளவுதானே? இதற்காகவா நீங்கள் கவலைப்படுகிறீர்கள்? பேசாமல் நான் சொல்லுகிறபடி செய்யுங்கள்" என்று அவனுக்குக் காதோடு ஒரு யோசனை சொல்லிக் கொடுத்தாள்.

ராகுலன் அவள் யோசனையைக் கேட்டுக் குதூகலமடைந்தான். "பேஷ், பேஷ்! அருமையான யோசனை!" என்று சொல்லிவிட்டு அவள் கூறியபடியே சக்கரவர்த்தியின் கட்டளையை நிறைவேற்றச் சென்றான்.

அன்று மாலையே ராகுலன் பணத்துடன் ஆடுகளை ஓட்டிக் கொண்டு சக்கரவர்த்தியின் முன்னால் வந்து நின்றான். சக்கரவர்த்திக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. "அடே ராகுலா! எப்படிப் பணம் கிடைத்தது உனக்கு?" என்று கேட்டான்.

"மகாராஜா, ஆட்டு மந்தையை ஓட்டிக்கொண்டு போனேன். ஆட்டு ரோமத்தைக் கம்பளம் நெய்பவர்களிடம் விற்றுவிட்டுப் பணத்தை

வாங்கிக்கொண்டு, ஆடுகளையும் ஓட்டிக்கொண்டு வந்துவிட்டேன்'' என்றான் ராகுலன் பெருமையுடன்.

'சரி, யாரோ இவனுக்கு இந்த யோசனையைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் இவனுக்கு ஏது இந்தச் சாமர்த்தியம்?' என்று நினைத்து, "ராகுலா, இப்படிச் செய்யும்படி உனக்குச் சொன்னது யார்?'' என்று கேட்டான் சக்கரவர்த்தி.

ராகுலனுக்கு என்ன சொல்வது என்று முதலில் பிடிபடவில்லை. உண்மையைச் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று பயபக்தியுடன், "மகாராஜா, எனக்கு ஒரு பெண் இருக்கிறாள். அவளுடைய யோசனைதான் இது'' என்று கூறினான்.

"ஓஹோ! உனக்கு ஒரு பெண் இருக்கிறாளா? அடேடே! நான் அவளைப் பார்த்ததே இல்லையே! சரி, நாளைக்கு அவளை வந்து என்னைப் பார்க்கச் சொல்லு. அவள் எப்படி வர வேண்டும் தெரியுமோ? நடந்தும் வரக்கூடாது, சவாரி பண்ணிக்கொண்டும் வரக்கூடாது. ராஜபாட்டை வழியாகவோ நடைப்பாதை வழியாகவோ வரக்கூடாது. உடுத்துக்கொண்டும் இருக்கப்படாது, உடுத்துக்கொள்ளாமலும் இருக்கப்படாது. கையில் முயலோ லகானோ ஒன்றும் கொண்டு வரக்கூடாது; கொண்டு வராமலும் இருக்கக்கூடாது. தெரியுமா? போய், வரச்சொல்!'' என்றான் சக்கரவர்த்தி.

ராகுலன் மறுபடியும் துயரத்துடன் வீடு வந்து சேர்ந்தான். 'அட ராமா! இந்தமாதிரியெல்லாம் யாரால்தான் வர முடியும்?' என்று அவன் மனம் கலங்கியது.

ஆனால் சக்கரவர்த்தியின் விசித்திரமான ஆக்ஞையைக் கேட்ட சுஜாதா சிறிதும் மனம் தளரவில்லை. "அப்பா, கொஞ்சங்கூடப் பயப்பட வேண்டாம். நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நீங்கள் மட்டும் வலையர்களிடம் போய் ஒரு வலையும், குட்டிச்சுவரிலிருந்து ஒரு கழுதையும், எங்கிருந்தாவது இரண்டு முயல் குட்டிகளும் கொண்டுவாருங்கள். பாக்கியை நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்றாள்.

ராகுலன் எல்லாவற்றையும் அவளிடம் கொண்டு வந்து சேர்த்தான். மறுநாள் பொழுது விடிந்தது. ராகுலன் வெளியே வந்ததும் சுஜாதாவைக் கண்டு திகைத்துப் போனான். ஒரு பக்கம் அவனுக்குச் சிரிப்புக்கூட வந்தது. சுஜாதா புடைவைபோல அந்த மீன் பிடிக்கும் வலையைச் சுற்றிக்கொண்டிருந்தாள். கழுதை மேல் ஒரு காலை வைத்துக் கட்டிக்கொண்டு மற்றொரு காலைத் தரையில் படும்படி ஊன்றிக் கொண்டிருந்தாள். கையில் இரண்டு முயல் குட்டிகளும் முணுக் முணுக்கென்று விழித்துக்கொண்டிருந்தன. துடையோடு சேர்த்து வலைக்குக் கீழே லகானைக் கட்டியிருந்தாள். ராகுலன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே,

"அப்பா, சந்தோஷமாய் இருங்கள். நான் சக்கரவர்த்தியைப் பேட்டி கண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அந்தக் கோலத்துடன் புறப்பட்டாள்.

ஒரு காலால் தரையில் உந்திக் கொண்டு மற்றொரு காலால் சவாரி செய்துகொண்டு அவள் சென்றது வேடிக்கையாகத் தான் இருந்தது. நடு பாட்டையில் கழுதையை ஓட்டாமல் பாதசாரிகள் நடக்கும் பாதையோரமாக, கால் நடைப்பாதையிலும் கழுதை ராஜபாட்டையிலுமாக அவள் அரண்மனையை நோக்கிச் சென்றாள்.

அரண்மனை உப்பரிகையிலிருந்து இதைக் கவனித்த சக்கரவர்த்தி அவளுடைய சாமர்த்தியத்தைக் கண்டு வியந்து பிரமித்தான்.

'அடே, ஆள் பலே கைக்காரிதான்!' என்று எண்ணி, தன்னுடைய வேட்டை நாய்களை அவள் வரும் திக்கை நோக்கி விரட்டிவிட்டான்.

சுஜாதா இதைப்போல் ஏதாவது நடக்கும் என்று எதிர்பார்த்துக் கையில் வைத்திருந்த முயல் குட்டிகளை வேட்டை நாய்களின் முன் ஓடவிட்டாள். முயல் குட்டிகள் ஓட, வேட்டை நாய்கள் அவைகளைத் துரத்திக்கொண்டு போய்விட்டன. சுஜாதா அரண்மனையுள் நுழைந்து சக்கரவர்த்தியின் முன்போய் நின்று, "வணக்கம், ராஜாதிராஜனே!" என்று தலை வணங்கினாள்.

சக்கரவர்த்தி பதிலுக்கு அவளைப் பார்த்து, "பெண்ணே! நீ நடந்தோ சவாரி செய்தபடியோ வரக்கூடாது என்று ராகுலனிடம் சொல்லியிருந்தேனே!" என்றான்.

"நான் கழுதையின்மேல் உட்கார்ந்து மனிதர்களைப் போலச் சவாரி செய்யாமலும், நடந்து வராமலுந்தானே வந்திருக்கிறேன்?" என்றாள் சுஜாதா.

சக்கரவர்த்தி, "சரி, நடுச் சாலையிலோ நடைப்பாதையிலோ வரக்கூடாது என்று கூறியிருந்தேனே" என்று கேட்டான்.

"நான் இரண்டுக்கும் மத்தியில் வந்தேன்" என்றாள் சுஜாதா.

"ஆடை உடுத்துக் கொண்டாயா?" என்றான் சக்கரவர்த்தி.

"இல்லையே, வலையைச் சுற்றிக்கொண்டேன்" என்றாள் சுஜாதா.

"சபாஷ்; முயல் சமாசாரம் என்ன?" என்று கேட்டான் சக்கரவர்த்தி.

"அதோ உங்கள் வேட்டை நாய்கள் துரத்திக்கொண்டு போகின்றனவே!"

"லகான்?"

"கையில் பிடித்துக்கொள்ள வில்லை. துடையில் அல்லவா கட்டியிருக்கிறேன்!"

சக்கரவர்த்தி இந்தச் சாமர்த்தியத்தையும் அவளுடைய சாதுரியமான பதிலையும் கேட்டு மெய்ம்மறந்து, "ஆகா, நான் உன்னை மணந்து கொள்ள ஆசைப்படுகிறேன். என்ன சொல்கிருய்?" என்ருன்.

"தங்கள் சித்தம் என் பாக்கியம்" என்ருள் சுஜாதா மிகுந்த அடக்கத்துடன்.

"ஆனல் ஒன்று; ராஜ்ய காரியங்களில் நான் சரியாக நியாயம் வழங்கினலும் வழங்கா விட்டாலும் நீ தலையிடக் கூடாது. சம்மதந்தானு?" என்று கேட்டான் சக்கரவர்த்தி.

சுஜாதா அதற்குச் சம்மதித்தாள். சக்கரவர்த்திக்கும் சுஜாதாவுக்கும் சீக்கிரத்திலேயே திருமணம் வெகு

தடபுடலாக நடந்தேறியது. ராகுலன் பணியாளாக இன்னமும் இருக்க முடியுமா? சக்கரவர்த்தியிடமிருந்து வெகுமதிகள் பெற்று வீட்டிலேயே வசித்து வரலானன்.

சில நாட்கள் சந்தோஷமாகக் கழிந்தன. ஊரில் பெரிய விழா ஒன்று நடந்தது. சக்கரவர்த்தியும் விழாவில் கலந்துகொள்ளச் சென்றிருந்தான். அன்று மாலை சுஜாதா உப்பரிகையில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது ஒரு குடியானவன் பசுமாட்டுடன் அழுதுகொண்டு நிற்பதைக் கண்டாள். உடனே அவனை அழைத்து வரச் செய்து, "அப்பா, ஏன் அழுகிருய்?" என்று பரிவோடு கேட்டாள்.

"மகாராணி, நான் அழாமல் என்ன செய்வது? என் பசுமாட்டின் கன்றுக்குட்டியைக் குறவர்கள் பிடித்துக்கொண்டு விட்டார்கள். கேட்டால் அவர்களுடைய குதிரை போட்ட குட்டி என்கிருர்கள்" என்றுன் குடியானவன்.

"சக்கரவர்த்தியிடம் சென்று முறையிடக்கூடாதா?" என்று கூறினுள் சுஜாதா.

"ஐயோ! அவரிடம் முறையிட்டுப் பார்த்த பின்தானே அழுகை வந்தது எனக்கு! அந்தக் குறவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூறிவிட்டாரே நம் சக்கரவர்த்தி!"

சுஜாதா சிறிது யோசித்தாள். "நாளைச் சபா மண்டபத்தில் நான் சக்கரவர்த்தியுடன் இருப்பேன். அப்போது நீ அங்கே வந்து நான் சொல்கிறபடி செய்ய வேண்டும்" என்று அவன் காதோடு சில வார்த்தைகள் கூறினுள். குடியானவன் மறுநாள் சக்கரவர்த்தியும் சுஜாதாவும் கொலு வீற்றிருக்கையில் சபா மண்டபத்துள் நுழைந்தான். பிரதானியர் புடைசூழ, சக்கரவர்த்தி வீற்றிருப்பதைப் பார்த்து, "மகாப் பிரபுவே, எனக்கு நியாயம் கிடைக்கச் செய்யுங்கள். என் ஆடு ஒன்று ஆற்றங்கரையில் மேய்ந்துகொண்டிருந்தது. அதை ஒரு கெண்டை மீன் துள்ளி வந்து விழுங்கிவிட்டுப் போய்விட்டது, மகாராஜா!" என்று முறையிட்டான்.

சக்கரவர்த்திக்கு இதைக் கேட்டதும் சிரிப்புத்தான் வந்தது! "அட முட்டாளே. உனக்குப் புத்தி சுவாதீனத்தில் இருக்கிறதா, இல்லையா? கெண்டை மீன் எங்கேயாவது ஆட்டை விழுங்குமா?" என்று கேலி செய்தான்.

குடியானவன் நிமிர்ந்து நின்று, "குதிரை எங்கேயாவது கன்றுக்குட்டி போடுமா? தாங்களே சொல்லுங்கள்?" என்று பதிலுக்குக் கேட்டான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டு, சக்கரவர்த்தி கோபங்கொண்டு, "அடே, உன்னை இப்படிக் கேட்கச் சொல்லியது யார்? உள்ளதைச் சொல்லிவிடு! இல்லாவிட்டால் உன் தலை கீழே உருளும்" என்று கர்ஜித்தான்.

குடியானவன் வெடவெடத்துப் போனுன். வேறு வழி

யின்றி, சக்கரவர்த்தினி யோசனை சொல்லிக் கொடுத்தாள் என்று உண்மையைக் கக்கிவிட்டான்.

சக்கரவர்த்தி சபை கலைந்ததும் சுஜாதாவைக் கூப்பிட்டு அனுப்பி, "நீ நம்முடைய ஏற்பாட்டை மீறிவிட்டாய். இனி இந்த அரண்மனையில் நீ இருக்கக்கூடாது. போய்விடு!" என்று கட்டளையிட்டான்.

"தாங்கள் விரும்பினால் நான் போய்விடுகிறேன். கடைசியாக ஒரு விருந்து மட்டும் உங்களோடு நான் சாப்பிட்டுவிட்டுப் போகச் சம்மதியுங்கள்" என்றாள் சுஜாதா.

'தொலைந்து போகிறது. இதென்ன பெரிய காரியம்' என்று சக்கரவர்த்தி சம்மதித்தான். விருந்து கேளிக்கை மயமாய் நடந்துகொண்டிருந்தது. சக்கரவர்த்திக்குத் திராக்ஷை ரஸமென்றால் உயிர். சுஜாதா கொஞ்சங் கொஞ்சமாய் ஊற்றி அவனைக் குடிக்கச் செய்தாள். சக்கரவர்த்தி சல்லாபமாய்க் குடித்துக் கொண்டிருந்தபோது, "தங்கள் கட்டளைப்படி நான் இந்த அரண்மனையை விட்டுப் போகப் போகிறேன். ஆனால் ஒரு வேண்டுகோள்: நான் போகும்போது நான் உயிருக்குயிராய் மதித்துப் போற்றும் ஒன்றை

எடுத்துச் செல்ல விரும்பு கிறேன். தங்கள் அநுமதி தேவை!'' என்று நயமாகக் கேட்டாள்.

"உம்; அப்படியே செய்து கொள்! தொலைந்து போகிறது, பரவாயில்லை'' என்றான் சக்கர வர்த்தி.

திராக்ஷை ரஸபானத்தைச் சுஜாதா அவனுக்கு மேலும் மேலும் ஊற்றிக் கொடுத்துக் கொண்டேயிருந்தாள். அள வுக்கு மீற மீற சக்கரவர்த்தி தன் வசமிழந்தான். தலை மயக் கத்தால் கிறங்கியது. அப்ப டியே சோபாவில் சாய்ந்து விட்டான்.

எவ்வளவு நேரம் ஆயிற்றோ தெரியாது. சக்கரவர்த்தி குளிர் காற்று வீசுவதை உணர்ந்து கண் விழித்துப் பார்த்தான். அவனுக்கு ஒன் றும் புரியவில்லை. இடம் என் னவோ புதிதாக இருந்தது. அரண்மனையின் அலங்காரம் எதையும் காணவில்லை. சிறிய சன்னல்! அதன் வழியாகச் சிலு சிலுத்த காற்று! பக்கத்தில் சுஜாதா நின்றுகொண் டிருப்ப தைப் பார்த்ததும், "இது எந்த இடம்? நான் எங்கு இருக்கி றேன்?'' என்று கேட்டான் சந் தேகத்துடன்.

"ஏன்? என் வீட்டில்தான் இருக்கிறீர்கள். அதனால் என்ன?'' என்றாள் சுஜாதா, ஒன்றும் அறியாதவளைப் போல.

"என்னவா? அடி, என்ன தைரியம் உனக்கு? என் மாளி கையிலிருந்து என்னை உன்னு டன் கொண்டு வர உனக்கு எவ் வளவு துணிச்சல் இருக்கவேண் டும்?'' என்று சக்கரவர்த்தி அவளிடம் சீறினான்.

"பிரபு, என்னை மன்னிக்க வேண்டும். நான் உயிருக்குயி ராக மதித்துப் போற்றுவதை என்னோடு கொண்டு போவ தைத் தாங்கள் அநுமதிக்க வில்லையா?''

"ஆமாம்; அநுமதித்தேன்! அதற்காக-!'' என்று சக்கர வர்த்தி படபடப்பாகக் கேட் டான்.

"நான் உயிருக்குயிராக மதித்துப் போற்றுவது தங்களைத்தான். அதனால்தான் தங்களை என் பல்லக்கில் வைத் துக் கொண்டுவரச் செய்தேன்'' என்றாள் சுஜாதா, மென்முறு வல் பூத்துக்கொண்டு.

சக்கரவர்த்தியின் கோப மெல்லாம் இந்தப் பதிலைக் கேட் டதும் மாயமாய் மறைந்தது. "ஆகா, இப்படிப்பட்ட அன்பும் அறிவும் நிறைந்த உன்னை இனி நான் பிரிந்து இருப்பதா? சே, சே, வா. நாம் அரண் மனைக்குச் செல்லலாம். நியா யத் தீர்ப்புச் சொல்ல உன் யோசனை அவசியம் வேண் டும்'' என்று அவள் கைகளைப் பற்றிக்கொண்டான் சக்கர வர்த்தி.

அப்போது தற்செயலாக அங்கே வர நேர்ந்த ராகுலன் இந்தக் காட்சியைக் கண்டதும் ஒருவருமறியாமல் மெதுவாக நழுவிவிட்டான்! அவன் வாயெல்லாம் பல்லாகிவிட்டது.

மிதக்கும் அன்னம்



முதல் படத்தைப் பார். அது ஓர் அன்னம். மெல்லிய ஜவ்வுத் தாளே அதன் மேல் வை. படத்தை வரைந்து கொள். நல்ல கெட்டியான காகிதத்தில் அதை வை. பென்ஸிலால் அழுந்த வரை. கெட்டிக் காகிதத்தில் உருவத்தின் சுவடு விழும். அதை அப்படியே நறுக்கிக் கொள். நடுவே நீண்ட சதுரமாக இருக்கிறதே; அதைப் போல் துவாரம் செய். படத்துக்கு வர்ணம் பூசு. மூக்கிலே சிவப்பு வர்ணம் நன்ருக இருக்கும்.



பிறகு, தனியாக மெழுகுக் காகிதம் ஒன்று எடுத்துக்கொள். இரண்டாவது படத்தில் உள்ள விசிறி மடிப்புப் போல் அதை மடி. மூன்றாவது படத்தில் இருப்பதுபோல், அந்த விசிறி மடிப்பைச் செருகு. அது அன்னத்தின் இரண்டு பக்கமும் சமமாக நீண்டிருக்க வேண்டும். இப்போது அன்னப் படத்தைத் தண்ணீரில் மிதக்க விடு. நிமிர்ந்து மிதக்கும்; சாயாது. அழகாக இருக்கும்.



ஸோப்புப் பெட்டி மோட்டார்

ஒரு ஸோப்புப் பெட்டியை எடுத்துக்கொள்ளுங்கள். முதலில் பென்சிலால் படத்தில் காட்டியபடி மோட்டாரின் வரைகோடு ஒன்றைப் போட்டுக்கொண்டு, கத்தரியினால் வெட்டவேண்டும். அவ்வளவுதான்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(A) 1. ஆலீஸ் ஜகதாம்பாள், டி., திண்டுக்கல்; 2. அங்கணன், R. A., சூலூர்; 3. அனிதா தேவி, வி., ராயப்பேட்டை; 4. அண்ணுமலே, P. M., சோளிங்கபுரம்; 5. அன்ன பூரணி, R., ராயப்பேட்டை; 6. அரசு, சொ. தி., காரைக்குடி; 7. ஆறுமுகம், அ. சு., வையம்பாளே யம்; 8. அய்யாசாமி,S, காங்கயம்; (B) 1. பக்தவத்சலு, பி. என்., எழும்பூர்; 2. பாலகணபதி, G., திண்டிவனம்; 3. பாலகோபால், J., கோயம்புத்தூர்; 4. பாஷ்யம், N. V., ராஜபாளேயம்; 5. பென்ஜமின், A., புதுக்கோட்டை; 6. பாக்கியலக்ஷ்மி, G., கோயம்புத்தூர்; 7. பாரதி, ஜ., உதகமண்டலம்; 8. புவனேசுவரி, ஆர்., பங்களூர்; 9. புவனேசுவரி, S., பங்களூர்; (C)1. சின்னேயா, P., கொழும்பு; 2. சித்ரா, V., விழுப் புரம்; 3. சந்திரசேகர், S., மயிலாப் பூர்; 4. சந்திரசேகரன், K. P., ஊத் துக்குளி; 5. சிதம்பரம், காளு டு காத்தான். (D) 1. தாமோதரன்,N., புதுடெல்லி; 2. தண்டபாணி, C.V., திருப்பாதிரிப்புலியூர்; 3. தர்ம ராஜன், V., திருவல்லிக்கேணி; 4. தேவநாதன், E. S., பூந்தமல்லி; 5. துரைராஜு, G., திருச்சி; (E) 1. எதிராஜன், பு., சூளே; (G) 1. கோபாலன் இ.அ., பழைய பல்லா வரம்; 2. கோபாலன், கே., மாதுங்கா; 3. கோபிநாத், பெ., கோயம்புத்தூர். (H) 1. ஹாமத் பாக்ஷா, K. J., திருச்சி; 2. ஹம்சா, C.S., பங்களூர் கன்டோன்மெண்டு; 3. ஹரிஹரன், பி. எம்., பங்களூர் தண்டு; 4. ஹரிஹரன், M. S., சோளிங்கபுரம். (I) 1. இந்திராணி பாய், M., தாராபுரம்; 2. ஐயுப் சேட் S., கூனூர். (J) 1. ஜகதீசன் சு. க., குகை; 2. ஜானகி, S., மயி லாப்பூர்; 3. ஜயராமன், நா. ஆ., சேத்துப்பட்டு. (K) 1. கல்யாண ராமன், R., குடியாத்தம்; 2. கல் யாணசுந்தரம், கபிஸ்தலம்; 3. காமாக்ஷி, V., உதகமண்டலம்; 4. கமலம், K. S., கோட்டயம்; 5. கனகசபாபதி, A., சின்னமனூர்; 6. கண்ணன், P., யாழ்ப்பாணம்; 7. கருப்பஞ்செட்டி, அழ., காரைக் குடி; 8. கோமளா, S., செவ்வாய்ப் பேட்டை; 9. கிருஷ்ணமூர்த்தி, P. B., அடையாறு; 10. கிருஷ்ண மூர்த்தி, K. C., கவுந்தப்பாடி; 11. கிருஷ்ணமூர்த்தி, S., மயிலாப் பூர்; 12. கிருஷ்ணன், M. R., பீளமேடு; 13. கிருஷ்ணன், R. S., ஹைதராபாத்; 14. கிருஷ்ணன்,

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லே)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி.................

(தேதி, மாதம், வருஷம்)

பிப்ரவரி '50

S., வேப்பேரி; 15. கிருஷ்ண ஸ்வாமி, R., மயிலாப்பூர்; 16. கிருபாசங்கரி, பொள்ளாச்சி; 17. குமாரஸ்வாமி, K. M., கோபி செட்டிப்பாளையம்; 18. குமார ஸ்வாமி, M., கொல்லம்; 19. குப்பு ஸ்வாமி, S., திண்டிவனம்; 20. கவியபெருமாள், M., வண்ணக் குடி. (L) 1. லக்ஷ்மணன், K., அறந் தாங்கி; 2. லக்ஷ்மணன், ரா., தியாகராயநகர்; 3. லக்ஷ்மிபாய், K., கோயம்புத்தூர்; 4. லக்ஷ்மி காந்தன், T.C., ஆர்க்காடு. 5. லக்ஷ்மிபதி, N., சோளிங்கபுரம்; 6. லீலாவதி, G., சிவகாசி; 7. லெனின், J.M., திருமங்கலம்; 8. லிலி கிரேஸ், P., ஜீயபுரம்; 9. லிங்கசாமி, G., சூலூர். (M) 1. மகாராஜன், எம். பி. எம்., தூத்துக்குடி; 2. மணி, R., குடியாத்தம்; 3. மாணிக்கம், வே., தேவகோட்டை; 4. மாரியப்பன்,

★★★★★★★★★★★★★★★★★

கண்ணன்

அடுத்த இதழ்

மார்ச்சு 15-ஆம் தேதி

வெளிவரும்

★★★★★★★★★★★★★★★★★

S. M., சங்ககிரி; 5. மீனாக்ஷி, வண்ணாரப்பேட்டை, திருநெல் வேலி; 6. மீனாக்ஷிசுந்தரம், ரா., தஞ்சாவூர்; 7. மீனாக்ஷிசுந்தரம், M.S., சாத்தூர்; 8. மீராபாய், L., மாரிக்குப்பம்; 9. மோஹன், V., தேனாம்பேட்டை; 10. முனுசாமி, K., தங்கவயல்; 11. முத்தையா, மு., போடிநாயக்கனூர்; 12. முத்து ஸ்வாமி, A.K., மயிலாப்பூர். (N) 1. நாகலக்ஷ்மி, K., ராயப் பேட்டை; 2. நாகேந்திரம், ம., யாழ்ப்பாணம்; 3. நல்லகண், M., தளபதிசமுத்திரம்; 4. நாராயண சாமி, கொ. வெ., கொடுமுடி; 5. நரேந்திரா, ஜி. டி. வேப்பேரி; 6. நாதன், கு. ப., ஜி.டி., சென்னை; 7. நசரேன், எஸ். ஜெ., கொழும்பு; 8. நீலகண்டன், T.R., கோமளீசு வரன்பேட்டை; 9. நித்யா, தி.கு., திருவள்ளூர். 10. நடராஜன், T., சோளிங்கபுரம்; 11. நாகேசுவர ராவ், A., பெரம்பூர். (P) 1. பத்மா, S., ஸ்ரீரங்கம்; 2. பத்மநாபன், பொ., யாழ்ப்பாணம்; 3. பத்மநா பன், R., எழும்பூர்; 4. பழனியப்பன், விராச்சிலை; 5. பழனிசாமி, S.M., சங்ககிரி; 6. பஞ்சாக்ஷரம், R.V., மயிலாப்பூர்; 7. பசுபதி, ஓ., கோயம்புத்தூர்; 8. பிச்சு, S., முடி கொண்டான்; 9. பிலிப், எம்., பெரம்பூர்; 10. பிரகாஷ், எஸ்., ஜபல்பூர்; 11. பிரேமா, R., மயி லாப்பூர்; 12, புருஷோத்தமன். T.S., கும்பகோணம். (R) 1. ராதா கிருஷ்ணன். வி., மயிலாப்பூர்; 2. ரகுபதி S., கடம்பூர்; 3. ராஜகோ பால், சி.எஸ்., ராயபுரம்; 4. ராஜா மணி, S.A., சிங்காநல்லூர்; 5. ராஜ நாதன், சி.வ., சித்தூர்; 6. ராஜா ராம், A. V., தேவக்கோட்டை; 7. ராஜேந்திரன். S.P., வண்ணாரப் பேட்டை; 8. ராஜேந்திரன், வி., மதுரை; 9. ராஜு, M.K., மதுரை; 10. ராஜு, R., மயிலாப்பூர்.

(மீதி அடுத்த இதழில் வரும்.)

311775

குப்பை போடாதே

எம். எஸ். ஸ்ரீநிவாஸன்

பையன்களிடம் எத்தனையோ முறை சொல்லிப் பார்த்தாய்விட்டது. நல்ல முறையில் ஒவ்வொருவரிடமும் நெருங்கி, "ஏன் அப்பா, இப்படி நமது பள்ளிக்கூடத் தாழ்வாரங்களிலும் வகுப்புக்களிலும் குப்பை போடுகிறீர்கள்? இது தகுமா?" என்றெல்லாம் எங்கள் தலைமை உபாத்தியாயர் சொல்லிப் பார்த்தார்.

எங்களுக்கு அவர் சொன்னது வேடிக்கையாயிருந்தது. 'அசுத்தம், அசுத்தம்' என்று உபதேசம் செய்ய வந்துவிட்டாரே; எங்களுக்கு மட்டும் தெரியாதா? வேண்டுமென்று செய்கிறோம்? ஏதோ ஒன்று இரண்டு முறை ஏதாவது ஒரு பையன் வேர்க்கடலைத் தோலை, கீழே தரையில் போட்டுவிட்டால் பிரமாதமாக ஆர்ப்பாட்டம் செய்கிறாரே, இந்த மனுஷர்! இன்னும் இரண்டு முறை தரையைப் பெருக்கிக்கொள்ளட்டுமே, யார் வேண்டாம் என்றது?

இவர் சொல்லச் சொல்ல, தாழ்வாரங்களிலும் வகுப்புக்களிலும் குப்பை அதிகமாகச் சேர ஆரம்பித்தது.

அன்று காலை வகுப்பு ஆரம்பமாகுமுன் பள்ளிக்கூடப் பையன்கள் எல்லாரையும் ஒன்று கூட்டினார் எங்கள் தலைமை உபாத்தியாயர். 'அவசரம்! முக்கியமான சமாசாரம்!' அது என்னவாய் இருக்கும்?

தலைமை உபாத்தியாயரே வந்துவிட்டார். வரும்போது வெறுமே வரவில்லை. ஏதோ ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு, ஏற்கனவே கிழிந்துபோயிருந்த அதன் பழைய காகித அட்டையைக் கழற்றிக்கொண்டே வந்தார். அதைக் கிழித்துக் கிழித்துக் கீழே எறிந்தார். பிறகு எங்கள் முன்னால் வந்து நின்றுகொண்டார். நாங்கள் எல்லாரும் அவர் பேசப் போவதை எதிர்பார்த்து மௌனமாய் இருந்தோம்.

தம் கோட்டுப் பையிலிருந்து ஒரு காகிதத் துண்டை எடுத்துப் பார்த்தார். பேச வேண்டியதற்கு உரிய குறிப்புக்களாயிருக்கலாம். ஆனால் அவர் அதைப் பார்த்து ஒன்றும் படிக்கவில்லை. அவற்றைச் சின்னஞ்சிறு துண்டுகளாகக் கிழித்து அப்படியே பறக்க விட்டுவிட்டார். அந்தத் துண்டுகள் காற்றில் மிதந்து, அறை முழுதும் பரவி, சிறுவர்கள் தலைமேலும் முகத்திலும் வந்து விழுந்தன. எல்லாரும் முணுமுணுத்தார்கள். தலைமை ஆசிரியர் இம்மாதிரி ஒரு கூட்டத்தில் குப்பையைப் பரப்பியது ஒருவருக்கும் பிடிக்கவில்லை.

ஆனால் அந்த மனுஷர் மற்றவர்கள் முணுமுணுப்பைக் கவனிக்கவில்லை. காகிதம் பென்சில் கொண்டு புதிதாய் ஏதோ எழுதினார். படித்துப் பார்த்தார். அது ஒன்றும் திருப்தியாயில்லைபோலிருந்தது. அதைக் கீழே கிழித்தெறிந்துவிட்டார். இதேபோல் மூன்று நான்குமுறை செய்தார்.

அவருக்குச் சிந்தனை ஓட வில்லை. ஆகவே பையிலிருந்து கொஞ்சம் நிலக்கடலையை எடுத்தார். (எங்களுக்குத் தருவதற்காக இல்லை.) ஒவ்வொரு கடலையாக உரித்து, பருப்பின் மேல் தோலை நிமிண்டி, கீழே உதிர்த்து விட்டு, தின்ன ஆரம்பித்தார்.

எங்களால் சகிக்க முடிய வில்லை. என்ன இது, ஒரு தலைமை ஆசிரியர், எங்களை யெல்லாம் கூட்டம் கூடும்படி செய்துவிட்டு, இப்படி விஷமத் தனம் செய்கிறாரே. இவர் முன்னாடியே எல்லாம் தயார் செய்துகொண்டு வரக் கூடாதா? இவர் சிந்தனை ஓட்டமும் மணிலாக் கொட் டைப் பலகாரமும் குப்பைக் கூளமும் இங்கேதானா வேண்டும்?...

பார்த்துக்கொண் டிருக்கும் போதே அவர் போட்ட குப்பை, காற்றின் துணையால் அறை முழுதும் பரவிவிட்டது. பொறுக்க முடியவில்லை. போதாக்குறைக்கு இதன் நடுவில் நாலு சாக்கலெட்டுத் துண்டுகளை வேறு எடுத்தார். சுற்றியிருந்த காகிதங்களைப் பிரித்துக் கசக்கி எறிந்தார்; சாக்கலெட்டைச் சுவைத்துத் தின்னத் தொடங்கினார்.

குப்பையைக் கண்கொண்டு காண முடியவில்லை. நல்ல வேளை; ஒருவழியாய்ச் சிந்தனை முடிந்துவிட்டதுபோல் இருக் கிறதே. இதோ பேச ஆரம் பித்துவிட்டார்:

"நம்முடைய பள்ளிக்கூட அறைகளையும் தாழ்வாரங்களை யும் பாழாக்க நம்மால் முடியும்; நிச்சயமாக முடியும். இங்கே யெல்லாம் குப்பை போடவும், தரையை அசுத்தமாக்கவும் எத்தனையோ வழிகள் இருக் கின்றன. ஆனால் நாம் நம் முடைய சொந்த இடத்தை மிகவும் சுத்தமாக வைத்துக் கொண்டால்தான் நன்றா யிருக்கும்!"

அட பாவமே! எங்கள் தப்பைத் தெளிவாகக் காட்டத் தானா இத்தனை நேரம் இந்தப் பேசாத உபதேசம்?

★ ★ ★ ★

தஞ்சை சரஸ்வதி மஹால் வாசகசாலையில் சம்ஸ் கிருதத்தில் ராமாயணப் புத்தகம் ஒன்று இருக் கிறது. அதிலுள்ள ஒவ்வோர் எழுத்தும் 'சிவ' என்ற தமிழ் வார்த்தையால் எழுதப்பட்டிருக் கிறது. இதைப் பூதக் கண்ணாடி வைத்துக்கொண்டு பார்த்தால்தான் தெரியும்.

கிரியும் பாம்பும்

'சோமசன்மா'

ஒரே ஒரு காட்டில் ஒரே ஓர் ஏரி. அந்த ஏரியின் கரையில் ஒரே ஒரு கொக்கு கூடு கட்டிக்கொண்டு வசித்தது. ஒரே ஒரு கொக்கு என்று சொன்னேன்? இல்லை, இரண்டு கொக்குகள்; ஒன்று கணவன், இன்னொன்று மனைவி.

ஒரு நாள் அவை இரண்டும் ரொம்பவும் வருத்தமாகத் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு வெகு நேரம் என்ன செய்வது என்று யோசனை செய்துகொண் டிருந்தன. இரை தேடக்கூடப் போகவில்லை. அப்படி யோசனை செய்யும்படியாக என்ன வந்துவிட்டது என்றால், நடந்தது இதுதான்: அவைகள் இரண்டும் தினம் அதிகாலையில் குஞ்சுகளுக்கு இரை தேடிக் கொண்டு வருவதற்காக வெளியே போகும். ஏனென்றால் சின்னக் குஞ்சுகளுக்கு அதற்குள்ளாகப் பறக்க முடியாதல்லவா? அவைகள் எப்படிப் போய் இரை தேட முடியும்? அதற்காகத்தான்.

அவைகள் அப்படித் தினம் போவதை ஒரு பாம்பு பார்த்துக் கொண்டேயிருந்தது.

புருஷனும் மனைவியும் பறந்து போயிற்றோ இல்லையோ, உடனே அந்தப் பாம்பு 'சரசர'வென்று நழுவிக்கொண்டே வரும். அந்தக் கொக்கின் கூட்டுக்குள் புகுந்து, பாவம், அத்தனை கொக்குக் குஞ்சுகளையும் விழுங்கிவிட்டு ஒருவருக்கும் தெரியாமல் ஓடிப் போய் அரசமரத்தடியில் இருந்த தன் புற்றுக்குள் ஒளிந்துகொண்டுவிடும். இப்படியே தினம் ஒரு பாம்பு செய்து கொண்டு வந்தால் அந்தக் கொக்குகளுக்கு வருத்தமாக இராதா? தன் குழந்தைகளை ஒரு பாம்பு விழுங்கினால் எந்தத் தாயார் தகப்பனுக்குத்தான் வருத்தமாய் இருக்காது! நிஜமாக அழுகை கூட வந்துவிடும்! நம்முடைய கொக்கும் அதன் மனைவியும் மனத்தில் தைரியம் உள்ளவைகள் ஆதலால் அழவில்லை.

புருஷக் கொக்குக்கு ஒன்றுமே புரியவில்லை. தன் மனைவியின் முகத்தைப் பார்க்கும்; தங்கள் கூட்டைப் பார்க்கும். பிறகு ஆகாயத்தைப் பார்க்கும். இப்படியே மாறி மாறிப் பார்த்துக்கொண் டிருந்தது.



பெண் கொக்கு சொல்லிற்று: "எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இந்த ஏரியை விட்டுப் பறந்துபோய் வேறு ஏரிக்குப் போய்விடுவோம். அதுதான் சரியான வழி."

புருஷக் கொக்கு சொல்லிற்று: "அசடே! இந்தப் பாம்புக்காகப் பயந்து வீட்டை மாற்றுவதா? இங்கேயே இருந்து அந்தப் பாம்பை ஒழிக்க வேண்டும்."

மனைவி: அதுவோ பாம்பு; பல் நிறைய விஷம் இருக்கிறது. அதனுடன் நாம் போட்டி போட முடியுமா? நமக்கும் பல் நிறைய விஷம் இருந்தால் ஒரு கை பார்க்கலாம். பேசாமல் போய்விடுவதுதான் சரி.

புருஷன்: நீ பெண்பிள்ளை. அப்படித்தான் பேசுவாய். நான் ஆண்பிள்ளை. அன்றியும் நினைத்து நினைத்து வீடு மாற்றுவது முடியுமா? நாம் போகிற இடத்திற்கு இந்தப் பாம்புப் பயல் வர மாட்டான் என்பது என்ன நிச்சயம்?

இப்படிப் புருஷன் சொன்னதும் மனைவிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. அப்போது, "மாமா" என்று ஒரு கீச்சுக் குரல் கேட்டது. இரண்டும் திரும்பிப் பார்த்தன. நண்டு! அவைகளுக்குப் பழக்கமான நண்டு அது. ஒழிந்த வேளைகளில் அவைகளுடன் உட்கார்ந்து வம்பளந்துகொண் டிருக்கும்.



"என்ன மாமா, மாமியோடு சண்டை பிடிக்கிறீர்கள்?" என்றது நண்டு.

"மாமியோடு சண்டை பிடிக்கவில்லையடா" என்று ஆதியோடந்தமாய் அதனிடம் நடந்ததையெல்லாம் கொக்கு சொல்லிற்று.

அதைக் கேட்டதும் நண்டு, "பூ! இவ்வளவுதானா? மாமா! இந்தப் பாம்புப் பயலை ஒரு நொடியில் ஒழிக்க நான் வழி சொல்லுகிறேன்" என்று கையைச் சொடுக்கிற்று. கொக்குக்குச் சந்தோஷம். "எப்படியடா? எப்படியடா?" என்று நண்டின் கையைப் பிடித்துக் குலுக்கிற்று.

நண்டு சொல்லும்: "மாமா, அதோ அந்த அரசமரத்துப் புற்றுக்குள்தானே பாம்புப் பயல் இருக்கிறான்? அதற்கு எதிரில் கொஞ்ச தூரம் போய் வலது கைப்பக்கம் திரும்பினால் ஓர் ஆலமரம் இருக்கிறது. அதன் அடியில் ஒரு வளை இருக்கிறது. அதற்குள்ளே ஒரு கீரிப்பிள்ளை இருக்கிறது. நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், நிறைய மீனைக் கொத்திக் கொண்டு போய், கீரியின் வளையிலிருந்து பாம்பின் புற்று

வரையில் வரிசையாகப் போட்டுவிட வேண்டியது. அப்புறம் என்ன நடக்கிறது என்று பாருங்கள்!"

முதலில் கொக்குக்கு ஒன்றும் புரியவில்லை. உங்களுக்கும் புரியவில்லையல்லவா? பாம்புக்கும் கீரிக்கும் ஜன்மப்பகை என்று உங்களுக்குத் தெரியுமே? ஒன்றை ஒன்று கண்டால் அப்படியே கடித்துத் தின்றுவிடும். அவ்வளவு பகை. அதனால் கீரிப்பிள்ளை மீனைத் தின்றுகொண்டே பாம்புப் புற்றுக்கு வந்துவிடும். அப்படியே பாம்பைப் பிடித்துக் கடித்துக் கொன்றுவிடும். அதுதான் நண்டின் தந்திரம்.

புருஷக் கொக்கு இதைக் கேட்டதோ இல்லையோ, அதற்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. "சபாஷ்! நண்டுப் பயலே! உன் மூளையே, மூளை" என்று நண்டைத் தூக்கிக் குதித்துக் கூத்தாடிற்று. தன் மனைவியைப் பார்த்து விறைப்பாக, "இப்போது என்னடி சொல்லுகிறாய்?" என்றது.

மனைவிக்கு நண்டின் தந்திரம் பிடிக்கவில்லை. "இங்கே வாருங்கள்" என்று தன் புருஷனைத் தனியாகக் கூப்பிட்டு, "ஆமாம், பாம்பையே கடிக்கும் கீரி அதைவிடப் பொல்லாதது அல்லவா? நாளைக்குப் பாம்பு செத்த பிறகு, அதுவே வந்து நம்முடைய குஞ்சுகளைத் தின்றுவிட்டால் நாம் என்ன செய்கிறது?" என்று ரகசியமாய்க் கேட்டது. புருஷன் அதை ஒப்புக் கொள்ளவில்லை. இவர்கள் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்த நண்டு அதற்குள்ளாக, "மாமா, இந்த நண்டின்



மூளையை இதில் பாருங்கள். அந்தப் பாம்பு சாகாவிட்டால் நான் என் காலை ஒடித்துக்கொள்ளுகிறேன்" என்றது.

கொக்கும், "நீ பலே கெட்டிக்காரன்! ஆள் சின்னவனாய் இருந்தாலும் மூளை பெரிதடா! உன் மாமி கிடக்கிறாள். அவளுக்கு எல்லாமே சந்தேகந்தான்! நீ வா, போவோம்" என்று நண்டை இழுத்துக்கொண்டு போயிற்று.

அவைகள் யோசனை செய்ததுபோலவே கொக்கும் நண்டும் ஏரிக்குப் போய் மீனைப் பிடித்துக்கொண்டு ஆல மரத்தடியை அடைந்தன. அங்கிருந்து வரிசையாக மீனைப் போட்டுக் கொண்டே வந்தது கொக்கு. பிறகு இரண்டுமாகக் கீரிப்பிள்ளை யின் வளைக்குப் பக்கத்தில் உள்ள சப்பாத்திக் கள்ளிக்குப் பின்புறம் போய் ஒளிந்துகொண்டு கீரிப்பிள்ளை வருகிறதா என்று பார்த்துக்கொண் டிருந்தன.

ரொம்ப நேரம் கழித்துக் கீரிப்பிள்ளை வெளியில் வந்தது. அப்போது வாசலில் மீன் கிடப்பதைக் கண்டதும் ஆச்சரியப் பட்டு நின்றது. உடனே, 'இது ஏதோ அதிசயமாய் இருக்கிறது. நம் வாசலில் யாரோ வேண்டும் என்றே மீனைப் போட்டிருக் கிறார்கள். ஒருவேளை அதில் விஷம் கிஷம் கலந்திருந்தால் நாம் செத்துப் போவோம். ஆகையினால் நாம் இதைத் தொடக் கூடாது' என்று நினைத்தது.

இப்படியாகச் சிறிது நேரம் நின்றது. பிறகு, 'ஒன்றே யொன்றை எடுத்துத் தின்று பார்ப்போம்' என்று எண்ணிற்று. ஏனென்றால் அதற்கு மீனென்றால் பிடிக்கும். ஒரு மீனை வாயில் போட்டுக்கொண்டு நாக்கைச் சப்புக் கொட்டிற்று. கசக்கவே இல்லை! விஷமாயிருந்தால் கசக்கவேண்டும் அல்லவா?

இப்படியே ஒவ்வொரு மீனாக அது தின்றுகொண்டே போயிற்று. கொக்குக்கும் நண்டுக்கும் சந்தோஷம். அதன் பின் புறம் இரண்டும் பதுங்கிப் பதுங்கிக் கூடவே போயின. கடைசி யில் அரசமரம் வந்தது. அதற்குப் பக்கத்தில் உள்ள பாம்புப் புற்றும் வந்தது. அதுவரையில் போட்டிருந்த மீன் எல்லா வற்றையும் கீரி தின்றுவிட்டது. அதற்குப் பிறகு அங்கே மீன் இல்லாமல் போகவே கீரிப்பிள்ளை ஏப்பம் விட்டுக்கொண்டு வீட்டுக்குப் போகத் திரும்பிற்று. இதைப் பார்த்த கொக்குக்கு வயிறு பகீரென்றது. 'இவ்வளவு கஷ்டப்பட்டு அத்தனை மீனை யும் பிடித்துக் கொண்டுவந்து போட்டும் அந்தக் கீரி அவ்வள வையும் தின்றுவிட்டு ஏமாற்றிவிட்டதே' என்று நினைத்து வருத்தத்துடன் கீரியிடம் போய், பின்வருமாறு சொல்லிற்று:

"ஐயா கீரியாரே, நீர் உமது எதிரியான பாம்பைக் கடிக்காமல் ஏன் போகிறீர்? என்னுடைய குஞ்சுகளையெல்லாம் அது தின்றுவிட்டது. நீர் இப்போது அந்தப் பாம்பின் கழுத்தைப் பிடித்துக் கொல்லும். எனக்காக நீர் செய்ய வேண்டாம். உம்முடைய எதிரியை நீர் கொல்லவேண்டாமா?"

அதைக் கேட்ட கீரிக்கு இப்போது விஷயம் விளங்கி விட்டது. "ஐயா, கொக்காரே, பாம்புப்பயலுக்கும் எனக்கும் ஜன்மப்பகை என்பது உண்மைதான். ஆனால் நீர் சொல்வதற்காக நான் அவனைக் கொல்லமாட்டேன். எனக்கு எப்போது இஷ்டமோ அப்போதுதான் கொல்லுவேன். உமக்குத் தைரியம் இருந்தால் நேரில் சண்டை போடும். இல்லாவிட்டால் போய் விடும்" என்று சொல்லிற்று.

இந்தச் சமயத்தில் புற்றுக்குள் இருந்த பாம்பு பேச்சுக்குரல் கேட்டு வெளியில் வந்தது. வந்ததும் தன் எதிரியான கீரியைக் கண்டதும், "உஸ்!" என்று சீறிக்கொண்டு வந்தது.

அதைக் கண்ட கீரி, 'கட கட' வென்று சிரித்துவிட்டு, "டே பாம்பு! உனக்குத் தலை எவ்வளவு சின்னதோ அவ்வளவு சின்னதுதான் மூளையும்! உனக்கும் எனக்கும் பகை என்பதற்காக எப்போது பார்த்தாலும் சண்டைபிடித்துக் கொண்டிருக்க வேண்டுமா? இந்தக் கொக்கு அப்படியே நினைத்துக்கொண்டு தந்திரம் செய்திருக்கிறது. நாம் மூன்றும் மனிதனுக்கு இடம் கொடுக்கலாமா? போய்ப் பேசாமல் படுத்துக் கொண்டு தூங்கு!" என்று சொல்லிவிட்டு, கொக்கின் பக்கம் திரும்பி, "ஐயா கொக்காரே! உமது மீன் விருந்துக்கு நன்றி! எனக்கு இன்னும் நாலு நாளைக்குச் சாப்பாடு வேண்டியதில்லை!" என்று சிரித்துக்கொண்டே போயிற்று.

கொக்கு பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு நின்றது. இவ்வளவையும் மரத்துக்குப் பின்புறமிருந்து பார்த்துக்கொண்டிருந்த கொக்கின் மனைவி வெளியே வந்து புருஷனைப் பார்த்து, "பேசாமல் வாருங்கள். வேறு ஏரிக்குப் போய்விடுவோம்" என்று கையைப் பிடித்து இழுத்தது. கொக்கும் சரியென்று மனைவியின்கூடப் போயிற்று.

ஆகையினால் பிள்ளைகளே! மனைவியாயிருந்தாலும் அவள் சொல்வதில் நியாயம் இருந்தால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இருவருக்குள் எவ்வளவுதான் பகை இருந்தாலும், அவர்கள் நாம் சொல்வதற்காகச் சண்டை போடமாட்டார்கள். தங்களுக்கு இஷ்டம் இருந்தால்தான் சண்டை போடுவார்கள் என்பது இதனால் தெரிகிறது அல்லவா?



பூனை

தி. ஜ. ர.

"அப்பா, அப்பா, பீரோவுக்கு அடியிலே பூனைக்குட்டி!" என்று கத்தினாள் அமிர்தம்.

"பூனைக்குட்டியா?" என்று கேட்டார் அப்பா. கிட்ட வந்து பார்த்தார். பூனைக்குட்டிதான். எலிக்குஞ்சு மாதிரி சின்னதாக இருந்தது. அப்பாவும் அமிர்தமும் அதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இந்தச் சமயத்தில் சுந்தரத்தின் குரல் கேட்டது. கொல்லைப் பக்கத்திலிருந்து அவன் கத்தினான்.

"அப்பா, அப்பா, கள்ளிப் பெட்டியிலே பூனைக்குட்டி!" என்றான்.

இதே சமயத்தில் அம்மாவின் குரலும் கேட்டது. ரேழி அறையிலிருந்து அவள் கத்தினாள்.

"இங்கே வந்து பாருங்களேன், புளிப் பானைக்குப் பக்கத்தில் பூனைக்குட்டி!" என்றாள்.

"அடேடே! இதென்னடா இது! இந்த வீடு முழுக்கப்

பூனைக்குட்டியாக இருக்கிறது'' என்று ஆச்சரியப்பட்டார் அப்பா.

இப்போது, ''மியாவ்! மியாவ்! மியாவ்!'' என்று ஒரு குரல் கேட்டது. அப்பா திரும்பிப் பார்த்தார்; அமிர்தமும் திரும்பிப் பார்த்தாள். அங்கே வாசற்படியில் ஒரு பெரிய பூனை நின்றது. உள்ளே வரப் பயந்தது.

''ஓஹோ! எங்களைப் பார்த்துப் பயமா? வழியில் நிற்கிறோமா? ஐயோ பாவம்! நாங்கள் ஒதுங்கி நிற்கிறோம். நீ உள்ளே போ'' என்றார் அப்பா.

அப்பா வெளியே வந்தார்; அமிர்தமும் வெளியே வந்தாள். பூனை உள்ளே போயிற்று. பீரோவுக்கு அடியில் புகுந்தது. குட்டியை அணைத்துக்கொண்டது. அன்போடு பால் கொடுத்தது.

''அப்பா, நாம் முன்னே இருந்தோமே ஒரு வீட்டில்; அங்கே இப்படிப் பூனை இல்லையே. ஏன்?'' என்று அமிர்தம் கேட்டாள்.

''இப்போதுதானே நாம் இந்த வீட்டுக்கு வந்தோம்? நமக்கு முன்னே இங்கே வேறு குடும்பத்தார் இருந்தார்கள். அவர்களிடம் இந்தப் பூனை பழகியிருக்கும். முந்திய வீட்டில் பூனையை நாம் வளர்க்கவில்லை. அதனால்தான் அங்கே பூனை இல்லை'' என்றார் அப்பா.

இப்போது சுந்தரமும் வந்து சேர்ந்தான்.

''அது சரி. அந்தக் குடும்பத்தாரோடு இந்தப் பூனை ஏன் போகவில்லை?'' என்று சுந்தரம் கேட்டான்.

''ஓ! அது எனக்குத் தெரியுமே. என் பாட புஸ்தகத்தில் போட்டிருக்கிறது. பூனை, பழகிய வீட்டை விட்டுப் பிரியாது; நாய், பழகிய மனிதனை விட்டுப் பிரியாது. பூனையை அடுத்த ஊரிலே கொண்டுபோய் விடு; அது திரும்பி வந்துவிடும். நாயை டில்லிக்கு அழைத்துக் கொண்டு போ; உன்னோடேயே இருக்கும்'' என்றாள் அமிர்தம்.

''இது உண்மைதான்'' என்றார் அப்பா.

''மியாவ்! மியாஅவ்! மியாஅஅவ்!'' என்று மறுபடியும் கத்தியது பூனை.

''ஓஹோ! வெளியே போக வேண்டுமோ? போ'' என்றார் அப்பா. சுந்தரம், அமிர்தம் இரண்டு பேரையும் அழைத்துக் கொண்டார். வாசற்படியை விட்டு நகர்ந்தார்.

பூனை வெளியே போயிற்று.

உச்சி நேரத்தில் சுந்தரம் பார்த்தான்; பீரோவுக்கு அடியிலே இரண்டு குட்டி; கள்ளிப் பெட்டி காலி! ஒன்று இருந்த இடத்தில் இரண்டு; இரண்டு இருந்த இடத்தில் ஒன்று; புது இடத்தில் ஒன்று- இப்படியே குட்டிகள் மாறிக்கொண் டிருந்தன.

இதையெல்லாம் சுந்தரம் கவனித்தான். ''ஏன் அப்பா? குட்டிகளை இடம் மாற்றிக் கொண்டே இருக்கிறதே இந்தப் பூனை; ஏன்?'' என்று கேட்டான்.

அப்பா சிரித்தார். '' 'குட்டி போட்ட பூனைமாதிரி' என்று உன் அம்மா சொல்லுவாளே; கேட்டதில்லையா? தன் குட்டிகளிடம் தாய்ப் பூனைக்கு ரொம்பவும் பிரியம். அவைகளை யாராவது கொண்டுபோய் விடுவார்களோ என்று பயம். எலிக்குஞ்சு மாதிரி இருக்கின்றன குட்டிகள். அவைகளைக் காக்கை கொத்திவிடலாம்; எலி கடித்துவிடலாம். தாய் இதற்காகத்தான் இடம் மாற்றிக்கொண்டே இருக்கிறது; ரொம்ப வசதியான, பத்திரமான இடமாக இருந்தால், இப்படி மாற்றாது'' என்றார்.

“பூனையை எலி கடிக்குமா? பூனையைக் கண்டாலே எலி பயப்படுமே” என்றான் சுந்தரம்.

“உண்மைதான். பூனைக்கு எலி பயப்படும். ஆனால், சின்னப் பூனைக் குட்டிகளுக்கு எலிதான் பெரிய அபாயம், கடித்துவிடும்” என்றார் அப்பா.

இந்தப் பூனை மனிதர்களிடம் பழகியதுதானே; இவர்களிடமும் இரண்டு நாளில் பழகிவிட்டது. இவர்கள் இதற்குப் பால் வைத்தார்கள்; சோறும் வைத்தார்கள். இது பாலை நன்றாகக் குடித்தது; சோறு கொஞ்சம் கொஞ்சந்தான் தின்றது. ஆரம்பத்தில் குட்டிகளை இவர்கள் தொட முடியவில்லை; தொட்டால், தாய் சீறியது. சில நாளைக்குப் பிறகு அப்படிச் சீறவில்லை. குட்டிகளை இவர்கள் எடுத்துப் பார்த்தார்கள்.

பூனை பொதுவாக ஐந்தாறு குட்டிகள் போடும். இந்தப் பூனையிடம் மூன்று குட்டிகளே இருந்தன. ஒன்று, முழு வெள்ளை; ஒன்று, முழுக் கறுப்பு; ஒன்று, வெள்ளையும் கறுப்பும். ஒன்பது நாள் வரைக்கும் குட்டிகள் கண் திறக்கவில்லை; பிறகுதான் திறந்தன.

“வெள்ளைக் குட்டி எனக்கு” என்றாள் அமிர்தம்.

“வெள்ளைக்காரர்களே ராஜ்யத்தை விட்டுப் போய்விட்டார்களாம். வெள்ளை எதற்கு? எனக்குக் கறுப்புக் குட்டி போதும்” என்றான் சுந்தரம்.

“வெள்ளையானால் என்ன? கறுப்பானால் என்ன? எல்லாம் நல்லதுதான். ஒன்று மாத்திரம் முக்கியம். பூனைக் குட்டிகளிடம் ரொம்ப அன்பாய் நடந்துகொள்ள வேண்டும். சிங்கம் புலி இனத்தைச் சேர்ந்தது பூனை; அது மிகவும் சுதந்தரமான பிராணி. கண்ட கண்ட கட்டுப்பாட்டுக்குப் பணியாது. அதை ‘வீட்டுப் புலி’ என்றுகூடச் சொல்லுவார்கள். பூனை முதலில் எங்கே இருந்தது தெரியுமா? காட்டிலே இருந்தது. எகிப்து என்று ஒரு தேசம் இருக்கிறது; கேட்டிருப்பாயே. அங்கேயிருந்துதான் பூனை வந்ததாம். எல்லா ஊருக்கும் பரவியதாம். பூனையை எகிப்தியர்கள் தெய்வமாகப் போற்றுகிறார்கள். இப்போதுகூட எல்லாக் காடுகளிலும் பூனை இருக்கிறது. காட்டுப் பூனை பொல்லாதது; சின்னப் புலிமாதிரிதான். ஏன், இந்த வீட்டுப் பூனையும் அப்படித்தான். இதை அடிக்கக் கூடாது. அடித்தால் சில சமயம் கோபம் கொள்ளும். ‘ஹூம்’ என்று சீறும்; பிருண்டிவிடும்” என்றார் அப்பா.

“பிருண்டுமா? இதற்கு நகமே இல்லையே!” என்றாள் அமிர்தம்.

“அதுதான் ஆச்சரியம். இதற்கு நகம் இருக்கிறது. அதை இப்போது விரலுக்குள் இழுத்துக்கொண்டிருக்கிறது. கோபம் வந்தால் வெளியே நீட்டும். உன்னாலும் என்னாலும் அப்படிச் செய்ய முடியாது. கொக்கி மாதிரி வளைந்த நகம்; ஈட்டி மாதிரி கூர்மையான பல்; அரம் மாதிரி சொரசொரப்பான நாக்கு - இவையெல்லாம் பூனைக்கு உண்டு. பூனையின் கண் ஒரு கடிகாரந்தான். நடுப் பகலிலே அதன் கருவிழி சின்னதாக இருக்கும். நேரம் ஆக ஆக அகலமாகிக்கொண்டே வரும். ராத்திரி முழு வட்டமாகி, நெருப்புத் தணல்போல் ஜொலிக்கும். பூனை பகலெல்லாம் அநேகமாகத் தூங்கிக்கொண்டே இருக்கும். வெயிலில் படுத்துச் சுகமாகத் தூங்கும். ராத்திரி வேட்டைக்குப் போகும். எலி, குருவி இவைகளை வேட்டையாடும்” என்றார் அப்பா.

"இருட்டிலே அதற்குக் கண் தெரியுமாமே; உண்மையா, அப்பா?'' என்று கேட்டான் சுந்தரம்.

"முழு இருட்டில் தெரியாது. சொற்ப வெளிச்சம் இருந்தால் போதும்; அதற்குக் கண் தெரியும். ராத்திரி முழு இருட்டாக நமக்குத் தோன்றுகிறது. அப்போதுகூட, சொற்ப வெளிச்சம் இருக்கத்தான் இருக்கிறது; நட்சத்திர வெளிச்சம். அது போதும் பூனைக்கு. நமக்குப் போதவில்லை; முழு இருட்டு என்று நினைத்துக் கொள்ளுகிறோம். பகல் வெளிச்சம் பூனையின் கண்ணுக்கு மிகவும் அதிகமாக இருக்கிறது. அதனால்தான் அதன் கருவிழி குறுகி விடுகிறது'' என்று அப்பா சொன்னார்.

இப்போதெல்லாம் சுந்தரம் கவனிக்கவில்லை. அவன் கறுப்புக் குட்டியோடு விளையாடிக் கொண்டிருந்தான். ஒரு காகிதத்தைச் சுருட்டிப் போட்டான். கறுப்புக் குட்டி பாய்ந்தது. எலியை வேட்டையாடுவது போல் கௌவியது; குதறியது; எறிந்துவிட்டு ஓடியது. எட்டி உட்கார்ந்து காதை நெறித்தது; வாலை முறுக்கியது. வாலைச் சுற்றித்தான் பூனை குறிபார்க்கும். பாய்வதற்கும் வால் ரொம்ப உபயோகம். பூனையின் மீசை எதற்குத் தெரியுமா? அதன் உடம்பு எவ்வளவு அகலமோ அவ்வளவு அகலம் மீசை. பொந்தோ, ஜன்னலோ, எதிலும் மீசையை விட்டுப் பார்க்கும். அது தட்டுப்பட்டதோ, பூனை நுழையாது. மீசை நுழையாத இடத்தில் அதன் உடம்பு நுழையாது. இது பூனைக்குத் தெரியும்.

பிறகு பரணில் என்னவோ சலசலத்தது. கறுப்புக்குட்டி காதை



நெறித்தது. பாய்ந்தது பாரேன் ஒரு பாய்ச்சல்.

"அப்பா, எவ்வளவு உயரம் பாய்கிறது இது!'' என்றான் சுந்தரம்.

"எலியை வேட்டையாடப் பாய்கிறது. பூனை மரம் ஏறும். சுவர்களில் தாவும். தன் உயரத்தைப்போல், ஆறு முதல் ஏழு மடங்கு உயரங்கூடத் தாவும். பெரிய பூனையின் நிறை சாதாரணமாக ஆறு அல்லது ஏழு பவுண்டு தான். வயிற்றிலே குட்டி இருந்தால் மூன்று அல்லது நாலு பவுண்டு கூடும். அப்போதும் இதே உயரம் தாவும்'' என்று அப்பா சொன்னார்.

"இது எலியை வேட்டையாடி என்ன செய்யும், அப்பா?'' என்று கேட்டான் சுந்தரம்.

"தின்னும். இறைச்சியும் மீனும் பூனைக்குப் பிரியமானவை. தண்ணீரில் சில சமயம் பூனை மீன் பிடிப்பது உண்டு. ஆனால், உடம்பை நனைத்துக் கொள்ள அதற்குப் பிடிக்காது. பூனையின் ரோமம் பட்டுப்போல் நயமாக இருக்கும். நனைந்தால் அது கெட்டுவிடும்'' என்றார் அப்பா.

"உடம்பை நனைக்காவிட்டால், சுத்தமாக இராதே'' என்றாள் அமிர்தம்.

"அப்படி இல்லை. பூனை மிகவும் சுத்தமான பிராணி. உடம்பை நக்கி நக்கிச் சுத்தம் செய்து

கொள்ளும். துளி அழுக்கு அதன் உடம்பில் இராது. அழுக்கான இடத்தில் அது காலைக்கூட வைக்காது. வீட்டுக்குள் அநேகமாக அசுத்தம் செய்யாது'' என்று சொன்னார் அப்பா.

மியாவ்!

அமிர்தம் சாப்பிடப் போக எழுந்தாள். வெள்ளைக் குட்டியைத் தோளிலே அணைத்துக் கொண்டாள். அது தவறிக் கீழே விழுந்தது. அடேடே! என்ன வேடிக்கை! அது கோணலாக விழவில்லை. நேராக விழுந்தது; கணக்காக நாலு காலையும் தரையில் ஊன்றியது. இதைப் பார்த்தான் சுந்தரம்.

"இது என்ன, அப்பா? இது நாலு காலிலேயே விழுகிறதே; எப்படி?'' என்று கேட்டான் சுந்தரம்.

"நாம் நிற்கிறோம்; நடக்கிறோம்; உட்காருகிறோம். அப்போதெல்லாம் நம் உடம்பு சாயாமல் துலாக்கோல்போல் சமாளித்துக் கொள்ளுகிறோம். இது எப்படித் தெரியுமா? நம் காது ஒவ்வொன்றிலும் மூன்று குழாய்கள் இருக்கின்றன. அவைகளில் ஒரு திரவம் இருக்கிறது. மட்டம் பார்க்கிற 'ஸ்பிரிட் - லெவல்' என்ற கருவி உண்டு. அந்த மாதிரி குழாய்கள் இவை. பூனையின் காதுகளிலும் இந்தக் குழாய்கள் இருக்கின்றன. ஆனால், இந்த விஷயத்தில் நம்மை விடத் துரிதமாகப் பூனையின் மனசு வேலை செய்கிறது. உடம்பு எப்படிப் புரண்டாலும் உணர்ந்துவிடுகிறது. உடனே சமாளித்துக்கொண்டு நிமிர்கிறது. இதில் பூனையோடு நாம் போட்டிபோட முடியாது. ஆனால், நடந்தாலும் சரி, ஓடினாலும் சரி; நாம் நிமிர்ந்தபடி இருக்கிறோமே; எவ்வளவு கெட்டிக்காரப் பூனைக்கும் இது முடியாது'' என்று விளக்கினார் அப்பா.

குறும்புக்காரி அமிர்தம், "அப்பா, அப்பா, நீங்கள் சொல்வதையெல்லாம் சுந்தரம் மாத்திரம் கேட்கவில்லை; என் வெள்ளைப் பூனைக்குட்டியும் கேட்கிறது. காதை நெறிக்கிறது பார்த்தீர்களா!'' என்றாள்.

அப்பா சிரித்தார். "கேட்கும்; கேட்கும். அது கேட்டது நான் சொல்வதை அல்ல. பாலும் சோறும் கேட்கிறது. பாவம், இரண்டுக்கும் பசிநேரம். கொடுங்கள்'' என்றார் அப்பா.

ஆமாம் என்பதுபோல, "மியாவ்!'' என்றது வெள்ளைக் குட்டி.

'ஆமாம், ஆஅமாஅம்' என்பதுபோல, "மீயாவ்! மீஇஇயாஅவ்வ்! மியாவ்!'' என்றது கறுப்புக் குட்டி.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MA...

கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இது மற்றச் சங்கங்களைப்போல் அல்ல; புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும்.

இதில் உடனே சேரவேண்டுமென்று உங்களுக்கு ஆசையாக இல்லையா? சேருவது மிகவும் சுலபம். இந்த இதழிலேயே ஒரு கூபன் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவு தான்.

இதே போன்ற கூபன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிறவர்கள் கண்ணன் கழக நிரந்தர அங்கத்தினர்கள். கூபன்களை அந்த அந்த மாதமே பூர்த்தி செய்து அனுப்பவேண்டும். அவர்களுக்கு இனாமாக எனமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். ஒரு விஷயம்: இதற்குச் சந்தாத் தொகை எதுவும் கிடையாது; கூபன்கள்தான் முக்கியம். ஒரே குடும்பத்தில் உள்ள குழந்தைகள் ஒரு கூபனைப் பூர்த்தி செய்து மற்றவர்கள் பெயர்களையும் அதில் சேர்த்து எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு குழந்தையும் தனித் தனிக் கூபன் அனுப்பவேண்டியதில்லை. சென்ற இதழில் கூபன் பின்புறம் கதை இருந்ததால் பலர் கத்தரித்து அனுப்ப முடியவில்லை என்று எழுதினார்கள். அதற்காகவே இந்த இதழில் 49-ஆம் பக்கத்தில் கூபனைக் கத்தரித்து அனுப்பக்கூடிய வகையில் பிரசுரித்திருக்கிறோம்.

Reg. No. M. 5542

For the Whole Family

கலைமகள் காரியாலயத்தில் மூன்று பத்திரிகைகள் மலர்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். ஒவ்வொரு பருவத்துக்குரியது. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பத்திரிகை.

கலைமகள், உபயோகமான கட்டுரைகளையும் உல்லாசமான கதைகளையும் தாங்கி வருகிறது.

மஞ்சரி, இந்தியாவிலுள்ள எல்லாப் பத்திரிகைகளிலிருந்தும் சாரத்தைத் திரட்டிய கதம்பம் (டைஜெஸ்டு).

கண்ணன், நாலு வயசு முதல் பதினாலு வயசுவரையிலுள்ள குழந்தைகளின் கண்ணையும் கருத்தையும் கவர்வது.

இந்த மூன்றையும் சேர்ந்தாற்போல வாங்க விரும்புபவர்கள் "குடும்பச் சந்தாதார்" ஆகலாம். அப்படி ஆகிறவர்களுக்கு லாபம் உண்டு.

உடனே உங்கள் 'குடும்பச் சந்தா'வை அனுப்புங்கள்.

Kalaimagal 6/-
Manjari 4/8
Kannan 3/-
Rs. ~~13/8~~ 12/-

POST FREE

—பூர்த்தி செய்து அனுப்புக—

ஐயா, தயைசெய்து என்னைக் 'குடும்பச் சந்தாதார்'ராகப் பதிவு செய்துகொண்டு 3 பத்திரிகைகளையும் அனுப்புங்கள்.

விலாசம்:

____